# சேவா வாணி

## மே - 2025



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

*(7 ஜனவரி 1976)*

## கோபியரின் பக்தி

அன்பார்ந்த குழந்தைகளே!
என் அன்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

கோபியரின் அன்புக்கு ஈடு இணையே கிடையாது. அனைத்துவித பக்திகளிலும் அது மேம்பட்டு தனித் தன்மையுடன் விளங்குகிறது. கிருஷ்ணன் பிருந்தாவனத்தை விடுத்து மதுராவுக்கு (பர்த்திக்கு) சென்ற பொழுது, கோபியர் அனுபவித்த வேதனை சொல்லுக்கடங்காது. இதனை அறிந்த கிருஷ்ணர் அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு தனது நண்பன் உத்தவரை அனுப்பினார். உத்தவரை கண்டதும் கோபியர் அவரை சூழ்ந்து கொண்டு "என் கிருஷ்ணன் எவ்வாறு இருக்கிறான், என் கிருஷ்ணன் எப்போது இங்கு வருவான்?" என்று கேட்டனர்.

அதற்கு உத்தவர் "எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆத்மாவை அறிந்துணர்வது எவ்வாறு என்பதையும், ஆத்மாவாகிய கிருஷ்ணனும் நீங்களும் ஒன்றே என்று அறிந்துணர்வது எவ்வாறு என்பதையும், கிருஷ்ணன் உங்களுக்குள் இருக்கிறான், அவன் வெறும் வடிவம் மட்டுமல்ல உங்களது ஆத்மாவே தான் அவன்; ஆகவே அவனைப் பிரிந்து இருப்பதாக நினைக்கத் தேவையில்லை என்பதையும் உணர்த்தவே கிருஷ்ணன் (சாயி) என்னை உங்களிடம் அனுப்பியுள்ளான்" என்றார்.

- ***அன்புடனும் அருளாசிகளுடனும்,***
**சாயி கிருஷ்ணன்**

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு

தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம்

**120** தனித்துவமான செயல்பாடுகள்

**மே 2025** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு |
| --- | --- |
| **42** | **54** |

| கல்விப் பிரிவு |
| --- |
| **24** |

## ஈஸ்வரம்மா தினம்

கரூர் | 6.5.25 | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கரூர் மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் 06/05/2025 அன்று ஈஸ்வரம்மா தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம், காந்தி கிராமம் சமிதியில் பாலவிகாஸ் மாணவச்செல்வங்களின் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின. அதனைத் தொடர்ந்து நாராயண சேவை நடைபெற்றது. பின்னர் சிறப்பு பஜனை நடைபெற்றது. இறுதியாக மங்கள ஆரத்தி பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.





## நாராயண சேவை

கரூர் | 11.5.25 | 50 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் கரூர் மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் 11/05/2025 அன்று சணப்பிரட்டி சக்தி மனவளர்ச்சி குன்றியோருக்கான பயிற்சி இல்லத்தில் நாராயண சேவை செய்யப்பட்டது. இதில் சுமார் 50 நபர்கள் பயனடைந்தனர். இந்நிகழ்வில் சாயி அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று பகவானுக்கு சேவை செய்தனர்.





# ஆரி வேலை பயிற்சி வகுப்பு நிறைவு விழா

காஞ்சிபுரம் தெற்கு | 25.5.25 | 15 பயனாளிகள் | 2 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்புக்குரிய பகவானின் தெய்வீக ஆசீர்வாதங்களுடன், பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக கரசங்கால் கிராமத்தில் 15 மகளிருக்கான 45 நாள் ஆரி பயிற்சி வகுப்பு நிறைவுற்றது.

ஸ்ரீ சத்ய சாய் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியை, அர்ப்பணிப்புள்ள யுவதி உறுப்பினர் திருமதி. காயத்ரி வி. வழங்கினார். பார்வதி நகர் சமிதி இந்நிகழ்ச்சியை சிறப்புற ஏற்பாடு செய்தது.

சான்றிதழ் வழங்கும் விழாவில், மாவட்ட சேவை ஒருங்கிணைப்பாளர், சமிதி சேவை ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிற உறுப்பினர்கள் பங்கேற்று, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓராண்டு சனாதன சாரதி சந்தா, சுவாமி திருவுருவப் படம் மற்றும் சுவாமி பிரசாதத்தை வழங்கினர்.




AUMSRISAIRAM

## இலவச கண் சிகிச்சை முகாம்

**காஞ்சிபுரம் தெற்கு** 25.5.25 **50** பயனாளிகள்

**6** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக, பம்மல் சங்கரா கண் மருத்துவமனை, மூலமாக இலவச கண் சிகிச்சை முகாம் 25/05/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி செங்கல்பட்டில் நடைபெற்றது. இதில் மொத்தம் 33 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இதில் கண் புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆகும். இந்நிகழ்வில் பங்கேற்ற சேவாதளத் தொண்டர்களின் எண்ணிக்கை 6 ஆகும்.

முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. நாராயண சேவையில் மொத்தம் 8 குடும்பங்கள் பங்கேற்று பகவானுக்குத் தொண்டு புரிந்தனர். நாராயண சேவை 50 பேருக்கு வழங்கப்பட்டது.




REDMI 13C 5G
25/05/2025 10:18

# இலவச பொது மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு

124 பயனாளிகள்

22 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் தங்களின் சமிதிகளைச் சுற்றியுள்ளோருக்கு இலவச பொது மருத்துவ முகாம்களை மாதந்தோறும் நடத்தி வருகின்றன. கடந்த மே மாதத்தில் பூண்டி பஜார் சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, மண்ணிவாக்கம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பொது மருத்துவ முகாம்களை நடத்தி பகவானுக்குத் தொண்டாற்றின.

பூண்டிபஜார் சமிதியின் சார்பாக, 04/05/2025 அன்று இலவச பொது மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தாம்பரம் மருத்துவமனையில் பணிபரியும் மருத்துவர் 1, செவிலியர் 3, பெயர்பதிவு நபர் 1 ஆகியோர் பங்கு கொண்டனர். இந்த இலவச முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல், சர்க்கரை அளவு கண்டறிதல், இதயத் துடிப்பு கண்டறிதல், கண் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் மருத்துவ ஆலோசனை மற்றும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. இந்தமுகாமில் 25 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டு பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 10 பேர் கலந்து கொண்டு பகவானின்

ஆசீர்வாதம் பெற்றனர்.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக கரசங்கால் கிராமத்தில் பொது மருத்துவ முகாம் 11/05/2025 அன்று நடைபெற்றது. இதில் சாய் அன்பர்கள் மற்றும் மருத்துவர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று மக்களுக்குத் தொண்டாற்றினர். இம்முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவுகளை கண்டறிதல், அவர்களின் உடல் எடை கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு அதற்கு உரிய மருந்து மாத்திரைகள் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. 52 கிராம பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி அங்கத்தினர்கள் 7 பேர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர்.

மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக 04/05/2025, 11/05/2025, 18/05/2025 மற்றும் 25/05/2025 ஆகிய நாட்களில் மண்ணிவாக்கம் சமிதியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் தலை சிறந்த மருத்துவரான டாக்டர். சேஷகிரி (நெஞ்சக நோய் நிபுணர் - ஓய்வுபெற்ற அரசு மருத்துவர்), டாக்டர் செல்வி மனிஷா (பொது நல மருத்துவர்), டாக்டர் செல்வி பிரசாந்தி (தோல் நோய் நிபுணர்) ஆகியோர் பங்கேற்று முகாமிற்கு வருகை தந்த 47 நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தனர். இதில் சுமார் 5 பேருக்கு இரத்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகளுக்கு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த சேவையில் சராசரியாக மண்ணிவாக்கம் சேவா சமிதியின் 5 சாயி அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் ஒவ்வொரு முகாமிலும் பங்கேற்று

பகவானுக்குத் தொண்டாற்றினர்.





# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

**காஞ்சிபுரம் தெற்கு** **228** சேவாதளத்தொண்டர்கள்

நமது இதயத்தில் என்றும் வாசம்செய்யும் நமது பகவானின் அருளுடன். காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் ஒவ்வொரு மாதமும் "இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்" என்ற திட்டத்தின் கீழ், தங்கள் சமிதியைச் சார்ந்த அங்கத்தினர்களின் இல்லங்களிலோ, முதியோர் இல்லங்களிலோ, அல்லது மற்றவர்களின் இல்லங்களிலோ வேத பாராயணம், பஜனை ஆகியவற்றை மேற்கொண்டு, சாயி நாமத்தைப் பலரின் உள்ளங்களில் அவனருளாலே நிலைநாட்டி, அவர்களை ஆத்ம திருப்தி அடையச்செய்கின்றன.
அந்த வகையில் கடந்த மே மாதத்தில், தாம்பரம் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் கலந்துகொண்டு பகவானுக்குத் தொண்டாற்றின.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக சுவாமியின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு 03/05/2025, 10/05/2025, 17/05/2025, 22/05/2025, 24/05/2025 மற்றும் 31/05/2025 ஆகிய தினங்களில் பக்தர்களின் இல்லங்களில் சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் திரளாக பங்கேற்றனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக, தாம்பரம் சமிதியின்

உறுப்பினர்கள், தங்கள் சமிதி உறுப்பினர்களின் இல்லங்களுக்கு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சென்று அவ்வில்லத்தாருடன் இணைந்து ருத்ர பாராயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பாராயணம் முடிந்த பிறகு, பகவான் பாபாவிற்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது.

அந்த வகையில் கடந்த மாதம் 03/05/2025, 10/05/2025, 17/05/2025, 24/05/2025 மற்றும் 31/05/2025 ஆகிய தினங்களில் பாராயணம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சமிதியின் அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். இதுவரை பகவானின் பேரருளால் 97 இடங்களில் (பக்தர்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள்) இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக பக்தர்களின் இல்லங்களில் ருத்ர பாராயணமும், பஜனையும் நடைபெறுகின்றன. அதன் படி 09/05/2025, 16/05/2025 மற்றும் 23/05/2025 ஆகிய தினங்களில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# ஈஸ்வரம்மா தினம்

காஞ்சிபுரம் தெற்கு | 6.5.25 | 405 பயனாளிகள் | 316 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பாக 06/05/2025 அன்று ஈஸ்வரம்மா தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று அதிகாலை 5:00 மணியளவில் அநேக சமிதிகளில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம் ஆகியன நடைபெற்றன. அதன் பின்னர் பிரசாந்தி கொடி ஏற்றப்பட்டது.

பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் தங்களின் பெற்றோரை பணிந்து வணங்கும் வண்ணமாக மாத்ரு பூஜை நடைபெற்றது. இதில் பார்வதி நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகளின் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் பங்கேற்றன.

நீர் மோர் வழங்கும் சேவையில் பார்வதி நகர் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பங்கேற்றன.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரத்தில் பணிபுரியும் 3 துப்புரவு பணியாளர்களுக்கு வஸ்திர தானம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது பாலவிகாஸ் மாணவச்செல்வங்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மாலையில், அநேக சமிதிகளில் சிறப்பு பஜனை நடைபெற்றது. இறுதியாக மங்கள ஆரத்தி பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டு வருகை தந்த அனைவருக்கும் பகவானின் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள், அவர்களின் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# உழவாரப்பணி

**காஞ்சிபுரம் தெற்கு**

**32** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தங்கள் சமிதியைச் சுற்றியுள்ள ஆலயங்களை சுத்தம் செய்து பொது மக்களுக்கும், பகவானுக்கும் சேவை செய்து வருகின்றன. அந்த வகையில் கடந்த மே மாதத்தில் மறைமலை நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரம், கோன் கிருஷ்ணா நகரில் உள்ள பிள்ளையார் கோவிலில் உழவாரப்பணி 04/05/2025 அன்று நடைபெற்றது. பின்னர் நீர் மோர் வழங்கும் சேவையும் நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, மறைமலை நகரில் உள்ள ஸ்ரீ நாகவல்லி அம்மன் கோவிலில் உழவாரப்பணி பாலவிகாஸ் மாணவச்செல்வங்களால் 05/05/2025 அன்று மேற்கொள்ளப்பட்டது.




NALAM
MEDICAL
CLINIC

# கோ பூஜை

காஞ்சிபுரம் தெற்கு | 12.5.25 | 60 பயனாளிகள் | 8 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருளால், மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 12/05/2025 அன்று, ஆத்தூர் வேத பாடசாலையில் கோ பூஜை நடைபெற்றது. பின்பு அங்குள்ள 60 பசுக்களுக்கு அகத்திக்கீரை வழங்கப்பட்டது. மொத்தம் பங்குகொண்ட சேவதளர்களின் எண்ணிக்கை 8.



# சாயி இலக்கியம் படித்தல்

**காஞ்சிபுரம் தெற்கு** **900 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் பாபா அருளிய 9 நன்னடத்தை விதிகளுள் ஒன்று சாயி இலக்கியங்களைப் படிப்பது. அதனைக் கடைபிடிக்கும் வண்ணமாக, தாம்பரம் சேவா சமிதியின் சார்பாகக் கடந்த மே மாதத்தின் அனைத்து நாட்களிலும் இணையதள சந்திப்பின் வாயிலாக வாஹினி கற்றல் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் ராமகதா ரச வாஹினி, பாகவத வாஹினி, தர்ம வாஹினி, பிரேம வாஹினி, தியான வாஹினி, பிரசாந்தி வாஹினி, சத்ய சாயி வாஹினி, சந்தேஹ நிவாரணி, வித்யா வாஹினி ஆகியவற்றின் கற்றல் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து முடிவுற்றன. இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் குழந்தைகள், பஜனை மண்டலி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் பெற்றோர் உட்பட சராசரியாக 30 பேர் தினமும் கலந்துகொள்கின்றனர்.

தற்போது இந்நிகழ்வில், சாய் சின்னகதா பாராயணம், இறைவனுடன் இனிய அனுபவங்கள், சத்தியோபனிஷத் ஆகிய கற்றல் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

# சாயி புரத சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

282 பயனாளிகள்

22 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசியுடனும், "சுவாமியின் அன்பு ஆயிரம் அன்னையர்களின் அன்பிற்குச் சமம்", என்ற கூற்றிற்கேற்பவும் ஒவ்வொரு மாதமும் தேகபலத்தையும் மனபலத்தையும் தந்திடும் சாயி புரதச் சத்து மாவானது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகளால், தேவைப்படுவோருக்கு தானமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மே மாதத்தில் ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள், இந்தப் புனிதமான சேவையில் பங்கேற்று பகவானுக்கு மகிழ்ச்சி அளித்தன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தயானந்த சரஸ்வதி கிருபா இல்லம் என்ற அமைப்பிற்கு 20/05/2025 அன்று நமது ஸ்வாமியின் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தயாரித்தளித்த 30 கிலோ சாயி புரதச் சத்து மாவை, ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் அந்த விடுதியின் காப்பாளரிடம் வழங்கினர். இதில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று நமது பகவானின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரம் சமிதி மகளிர் குழு

21/05/2025 அன்று குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என 125 பேருக்கு சாய் புரதச் சத்து மாவை விநியோகம் செய்தனர். சாய் புரதச் சத்து மாவு அனந்தபூர் கல்லூரியின் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாது சுமார் 120 உயர்வகை சானிட்டரி நாப்கின் பட்டைகளும் மருத்துவமனையில் மருத்துவத்திற்காக அனுமதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக, சமிதியின் அங்கத்தினர்கள் தாமாகவே சாய் புரதச் சத்து மாவிற்கான மூலப்பொருட்களை தரமான முறையில் கொள்முதல் செய்து, அதனை சுத்தமான முறையில் வறுத்தரைத்து, நன்கு ஆறவைத்து, கலந்து, அதனைப் பொட்டலங்களாகக்கட்டி, 10/05/2025 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலும், தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனையிலும், சுமார் 125 பேருக்கு சாய் புரதச் சத்து மாவு பொட்டலங்களை இலவசமாக வழங்கினர். இதில் பெருங்களத்தூர் சேவா சமிதி அங்கத்தினர்கள் தங்களை மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொண்டனர்.





# சிறப்பு இசை கச்சேரி

காஞ்சிபுரம் தெற்கு | 18.5.25 | 52 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக 18/05/2025 அன்று நமது பகவானின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு இசை கச்சேரி நடைபெற்றது.

இதில் வீணை மாற்று வயலின் இசை பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. வித்துவான் திரு சதீஷ் மற்றும் வித்துவான் திரு அரவிந்த் குழுவினர்களின் வீணை வயலின் இசை நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக திரு அருணாசலம் ராஜலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு வித்துவான்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் சமிதி அங்கத்தினர்கள் திரளாக பங்கேற்றனர்.



# சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு

123 பயனாளிகள்

13 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கு நாராயண சேவை செய்துவருகின்றன. "மானவ சேவையே மாதவ சேவை" என்ற கூற்றிற்கிணங்க சமுதாயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு நமது சாயி அன்பர்கள் உணவளித்து பகவானுக்குத் தொண்டாற்றி வருகின்றனர். அந்த வகையில் கடந்த மே மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, இந்த சேவையில் ஈடுபட்டது.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, வரவிருக்கும் நமது பகவானின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு 04/05/2025, மற்றும் 26/05/2025 ஆகிய தினங்களில் மறைமலைநகரைச் சுற்றியுள்ள இடங்களில் நாராயண சேவை நடைபெற்றது.

இதன்மூலம் மொத்தமாக 123 பேர் பயனடைந்தனர். இதில் சமிதி அங்கத்தினர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் ஆகியோர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.

# நீர் மோர் வழங்கும் சேவை

**காஞ்சிபுரம் தெற்கு** **4315** பயனாளிகள்

**200** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள், தற்போது நிலவும் கோடை காலத்தில், சுட்டெரிக்கும் வெயிலில் வாடுவோருக்கெல்லாம் நீர் மோர் வழங்கும் சேவையை செய்துவருகின்றனர்.

அவ்வாறு மக்களின் தாகத்தை தணித்தும், அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியும், பகவானுக்கு தொண்டு புரிகின்றனர். அந்த வைகையில் கடந்த மே மாதத்தில் பூண்டி பஜார் சேவா சமிதி, கூடுவாஞ்சேரி சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவைப் பணியில் ஈடுபட்டனர்.

மொத்தமாக 4315 கப் நீர் மோர் பகவானின் அருளால் வழங்கப்பட்டது. இந்த புனிதமான சேவையில் சாயி அன்பர்கள், பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள், அவர்களின் பெற்றோர் ஆகியோர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.


Hospital
தம்பர் தெரு
VE ALL
VE ALL

Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மே
2025

## பள்ளிப்பொருட்கள் விநியோகம்

**காஞ்சிபுரம் தெற்கு** | 10.5.25 | **8** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால், பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக 10/05/2025 அன்று தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனையில் உள்ள மாணவர்களுக்கு எழுதுகோல்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன. இந்த சேவையை அந்த மருத்துவமனை நிர்வாகம் பெரிதும் போற்றி பகவானுக்கு நன்றி தெரிவித்தனர்.





# பார்வையற்றோருக்கான பொதுத் தேர்வுதனை அவர்களுக்காக எழுதும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

1 பயனாளிகள்

1 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால், பார்வையற்றோர் கல்வி பயின்று, பிரத்யேகமான பரிச்சைகளை மேற்கொண்டு வாழ்வில் முன்னேறி வருகின்றனர்.

அரசு சட்டக்கல்லூரியில் பயிலும் பார்வையற்ற மாணவி ஒருவருக்காக அவருடைய பொதுத் தேர்வினை அவருக்காக அவர் சொல்லச் சொல்ல விடைத்தாளில் எழுதும் அதி உன்னத சேவையினை பெருங்களத்தூர் சேவா சமிதி உறுப்பினர் திருமதி காயத்ரி ஸாயிராம் அவர்கள் 12/05/2025 முதல் 16/05/2025 வரை செய்து அனைவரின் பாராட்டுகளையும் அன்பு பகவானின் அருளையும் ஒரு சேரப் பெற்றார்.



# பாலவிகாஸ் குழந்தைகளுக்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாம்

## காஞ்சிபுரம் தெற்கு

பகவானின் பெருங்கருணையினால், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும், தங்களின் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு கோடைகால சிறப்பு பயிற்சி முகாமை நடத்தி, குழந்தைகளிடத்தில் நற்பண்புகளை விதைக்கின்றனர்.

அந்த வகையில் இந்த முறை, தாம்பரம் சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, பெரிய காஞ்சிபுரம் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த முகாமை, தங்களின் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு நடத்தினர்.

இந்த முகாமில் ஆன்மிகம், பாரதிய கலாச்சாரம், மனித நெறிமுறைகள், நற்பண்புகள், வேதம் , பஜனை, கைவினை கண்காட்சி, சத்சங்கம், வாசகர் வட்டம், கதைகள், யோகா பயிற்சி, சேவை நிகழ்ச்சிகள் மற்றும் பல அரங்கேறி குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவின.





## புத்த பூர்ணிமா

காஞ்சிபுரம் தெற்கு | 9.5.25 | 17 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நல்லாசிகளுடன், பூண்டி பஜார் சேவா சமிதியின் சார்பாக 09/05/2025 அன்று புத்த பூர்ணிமா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதிகாலை 5:00 மணியளவில் ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம் ஆகியன நடைபெற்றன. மாலையில், சமிதியில் சிறப்பு பஜனை நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் சமிதி அங்கத்தினர்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

## முதியோர் இல்ல சேவை

காஞ்சிபுரம் தெற்கு

**85** பயனாளிகள்

**20** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சமிதிகள், தங்களுக்கு அருகிலுள்ள முதியோர் இல்லங்களுக்குச் சென்று ஒவ்வொரு மாதமும் பல்வேறு சேவைகளை செய்து வருகின்றன. அந்த வகையில் கடந்த மே மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டனர்.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 06/05/2025 அன்று ஸ்ரீ ஜெயேந்திரர் முதியோர் இல்லத்தில் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சமிதி உறுப்பினர்கள் முதியோர் இல்லத்திற்குத் தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றை வழங்கினர். அதுமட்டுமல்லாது, பாலவிகாஸ் குழந்தைகள் அங்கிருந்த முதியோர்களுக்கு பாதபூஜை (மாத்ரு பூஜை) செய்தது அனைவரையும் மனம் நெகிழச் செய்தது. முதியோர்களும் குழந்தைகளை மனமார வாழ்த்தினர். இதில் சுமார் 25 முதியோர் பயனடைந்தனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக 01/05/2025 அன்று சங்கரா முதியோர் இல்லத்தில் பாலவிகாஸ் குழந்தைகளால் வஸ்திர தானம் நடைபெற்றது. மேலும், 15 கிலோ கோதுமை மாவும்

வழங்கப்பட்டது. முதியோர் அனைவரும் பாலவிகாஸ் குழந்தைகளை மிகுந்த மகிழ்ச்சியோடு, வாழ்த்தினர். இதில் சுமார் 60 முதியோர் பயனடைந்தனர்.



## ஸ்ரீ சத்ய சாயி அமிர்த கலசம் விநியோகம்

**காஞ்சிபுரம் தெற்கு** **27** பயனாளிகள்

**2** சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கும், தங்களின் சமிதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ளோருக்கு, நமது பகவானால் தொடங்கி வைக்கப்பட்ட "அமிர்த கலசம்" என்னும் பகவானின் பிரசாதத்தை இலவசமாக வழங்கி வருகின்றன.

இந்த அமிர்த கலசத்தில் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களும், குளியல் பொருட்களும் அடங்கி உள்ளன. கடந்த மே மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி இந்த சேவையில் ஈடுபட்டது.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 04/05/2025 அன்று மறைமலை நகர் சமிதியைச் சுற்றியுள்ள 9 குடும்பங்களுக்கு அமிர்த கலசங்கள் வழங்கப்பட்டன.

# ஈஸ்வரம்மா தின கொண்டாட்டம்

**காஞ்சிபுரம் வடக்கு** 6.5.25

ஈஸ்வரம்மா தின கொண்டாட்டம் பஞ்ச மாதா என்ற தலைப்பில் (01.05.2025 – 06.05.2025) கொண்டாடப்பட்டது. இதில் கோ பூஜை; நன்மங்கலம் முதியோர் இல்லத்தில் சுத்தம் செய்தல் மற்றும் மரக்கன்றுகளை நடுதல் போன்ற சேவைகள் சிறப்பாக நடைபெற்றது. மேலும் தேச மாதாவின் சிறப்பை பற்றி பாலவிகாஸ் குழந்தைகள் உரையாற்றினார்கள். மேலும் பாலவிகாஸ் குழந்தைகளின் பக்தி பாடல்களுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. துப்புரவு பணியாளர்களுக்கு மோர் மற்றும் வஸ்திர தானம் வழங்கப்பட்டது.





## மாத்ரு பூஜை

**காஞ்சிபுரம் வடக்கு** 11.5.25 **27** பயனாளிகள்

நமது சுவாமியின் நல்லாசியுடன், ஈஸ்வரம்மா தினத்தின் ஒரு பகுதியாக, மடிப்பாக்கம் சமிதி, தனது தத்தெடுத்த கிராமத்தில், மாத்ரு பூஜையை 2025 மே மாதம் 11ஆம் தேதி நடத்தியது. அதில் பலவிகாஸ் வகுப்பில் படிக்கும் குழந்தைகள், அவர்களுடைய பெற்றோர் மற்றும் குருமார்கள் கலந்து கொண்டார்கள். இந்த பூஜையில் 10 பெற்றோர், 9 மாணவர்கள், 5 மாணவிகள் மற்றும் 3 குருமார்கள் பங்கேற்றனர்.





# தூய்மை சேவை பணி

காஞ்சிபுரம் வடக்கு

26 மே 2025

125 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளுடன், காஞ்சி மஹா பெரியவா ஜெயந்தியை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து திரளான சமிதி அன்பர்கள் சுமார் 125கும் மேற்பட்ட சேவாதள் கலந்து கொண்டு ஓரிக்கையில் உள்ள காஞ்சி மஹா பெரியவா மணி மண்டபத்தில் சேவா பணியை மேற்கொண்டனர். அங்கு இருக்கும் கோசாலையையும் சுத்தம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. இதில் கலந்து கொண்ட அனைத்து சாய் அன்பர்களும் பேரானந்தம் அடைந்து பகவானின் அருள் கிடைக்கப் பெற்றனர்.

# கோடை பயிற்சி முகாம் - கருத்தரங்கம்

## காஞ்சிபுரம் வடக்கு

பகவானின் நூறாவது பிறந்த நாளை விமர்சையாக கொண்டாடும் வகையில் நங்கநல்லூர் பிரதான சமிதியின் கோடை பயிற்சி முகாமில், “இந்திய கலாச்சாரமும் ஆன்மீகமும்” என்ற தலைப்பில் “வாழ்க வளமுடன்” சிற்றரங்கத்தில் மே 2 முதல் 4 வரை மிகச்சிறப்பாக கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் 127 பள்ளி மாணவ மாணவிகளும், 25 பாலவிகாஸ் குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

# கோடைக்கால நீர்மோர் விநியோகம்

**காஞ்சிபுரம் வடக்கு** ஏப்ரல் 14, 2025 முதல் மே 31, 2025 வரை

ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி முதல் மே மாதம் 31ஆம் தேதி வரை மாடம்பாக்கம் சமிதியின் சார்பாக அருகில் அமைந்துள்ள சிவன் கோவில் பேருந்து நிறுத்தம், கிருஷ்ணர் கோவில் பேருந்து நிறுத்தம் மற்றும் சுதர்சன் நகர் பேருந்து நிறுத்தம் ஆகிய மூன்று இடங்களில் நீர்மோர் விநியோக சேவை மேற்கொள்ளப்பட்டது. “மானுட சேவையே மாதவ சேவை” என்னும் சுவாமியின் வாக்கிற்கிணங்க கோடை காலத்தில் வரும் மக்களின் தாகம் தணிக்கும் பொருட்டு இச்சேவை மேற்கொள்ளப்பட்டது. ஆண்கள், பெண்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் என 30 பேர் அவரவர் பணி நேரத்திற்கேற்ப இச்சேவையில் பங்கேற்றனர்.



# கோவிலில் சாய் பஜனை

காஞ்சிபுரம் வடக்கு | 17.5.25 | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண ஆசீர்வாதத்துடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் பம்மல் சமிதி சார்பில், ஒவ்வொரு மாதமும் ஒரு சனிக்கிழமையில் பம்மலில் அமைந்துள்ள திருக்கோயில்களில் சாய் பஜனை நடைபெறுவது வழக்கம். இம்மாதம் பம்மல் கிருஷ்ணா நகர் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயிலில் நடைபெற்ற பஜனையில், 25க்கும் மேற்பட்ட சாய் அன்பர்கள் ஆழ்ந்த பக்தியுடன் கலந்துகொண்டு தெய்வீக அருள் பெற்றனர்.



## நாராயண சேவை

காஞ்சிபுரம் வடக்கு | 18.5.25 | 80 பயனாளிகள் | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண அருளால், பம்மல் சமிதியின் அனைத்து சாயி அன்பர்களும் மற்றும் பாலவிகாஸ் பெற்றோரும் மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை இணைந்து நாராயண சேவையில் ஈடுபடுவது வழக்கம். இதனடிப்படையில், இம்மாதமும் சமிதி அன்பர்கள் தாமாக முன்வந்து தக்காளி சாதம் சமைத்துப் பொட்டலங்களாக பேக் செய்து கொடுத்தனர். நமது சாய் இளைஞர்கள் அதை அருகிலுள்ள நரிகுறவர்கள் மற்றும் தங்கும் இடம் இல்லாத ஏழை மக்கள் சுமார் 85 பேருக்கு வழங்கினர்.





# பாலவிகாஸ் கோடை காலப் பயிற்சி முகாம்

**காஞ்சிபுரம் வடக்கு** மே 19 முதல் 30, 2025 **25** பயனாளிகள்

பகவானின் அருளால் கோடை விடுமுறை பயிற்சி முகாமை முன்னிட்டு, சிட்லபாக்கம் சமிதி பாலவிகாஸ் குழந்தைகளுக்கு, குரு பாதுகா ஸ்தோத்ரம் மற்றும் மதுராஷ்டகம் 10 நாட்களுக்கு தினமும் ஆன்லைன் வாயிலாக சிறப்பாக கற்று கொடுக்கப்பட்டது. குழந்தைகள் அனைவரும் பங்குபெற்று, கற்று கொண்டு, ஒப்புவித்தனர். இந்த அருமையான பாக்கியம் அளித்த பகவானுக்கும் பாலவிகாஸ் குரு அனைவருக்கும் சமிதி உறுப்பினர்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

## இலவச கண் பரிசோதனை முகாம்

கன்னியாகுமரி 4.5.25 **217** பயனாளிகள்

**37** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, 04/05/2025 அன்று வடசேரியில் அமைந்துள்ள எஸ்.எம்.ஆர்.வி மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகாமிற்கான முதன்மை ஏற்பாடுகள் 03/05/2025 அன்று மாலை 03.00 மணி முதல் 06.00 மணி வரை மாவட்ட சாய் அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. 04/05/2025 அன்று காலை 8.30 மணிக்கு பஜனையுடன் சேவை நிகழ்ச்சி தொடங்கியது. 217 பயனாளிகள் பரிசோதிக்கப்பட்டனர். இதில் கண் அறுவை சிகிச்சைக்காக 95 பேர் தேர்வுசெய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் அன்று மாலையே திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. சேவையில் சத்ய சாயி அன்பர்கள் 37 பேர் கலந்து கொண்டனர்.

மேலும் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது.

இறுதியாக மதியம் 2:30 மணியளவில் ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி நிறைவடைந்தது.





# அன்னை ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டம்

கன்னியாகுமரி 6.5.25 77 பயனாளிகள்

18 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் 06/05/2025 அன்று தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குலசேகரன்புதூர் சமிதியில் மகிளா அன்பர்களின் தலைமையில் காலை 05.20 மணிக்கு ஓம்காரம், ஸாய் ஸுப்ரபாதம் மற்றும் ஸாய் அஷ்டோத்ர பாராயணம் ஆகியன நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, பாலவிகாஸ் குழந்தைகள் தங்களின் பெற்றோருக்கு பாத பூஜை செய்து அவர்களின் ஆசிகளை பெற்றுக் கொண்டனர். பின்பு பாலவிகாஸ் குரு ஸாய் அனு அவர்கள் ஈஸ்வரம்மா தினத்தின் சிறப்பு குறித்து எடுத்துரைத்தார். இறுதியாக காலை 07.00 மணிக்கு பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டதோடு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

அதேபோல் நாகர்கோவில் சமிதியில் காலை 05.04 மணிக்கு ஓம்காரம், ஸாய் ஸுப்ரபாதம் மற்றும் நகரசங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. தொடர்ந்து 06.40 மணிக்கு ஸ்ரீ ஸத்ய

ஸாய் அஷ்டோத்திர பாராயணம் நடைபெற்றது. பின்பு 07.02 மணிக்கு பிரசாந்தி கொடி, ஸாயி பரமேஸ்வரி அம்மா அவர்களால் ஏற்றப்பட்டது. அன்பர்கள் இணைந்து 07.20 மணிக்கு வேதபாராயணம் செய்தனர்.

மேலும் காலை 09.00 மணி முதல் நடைபெற்ற பாலவிகாஸ் குழந்தைகளின் போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்தது. நண்பகல் 12.30 மணிக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது. தொடர்ந்து மதியம் 2.30 மணிக்கு மாவட்டத்தலைவர் ஸாய் சடையப்பன்பிள்ளை அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகளுக்கு அன்பு பரிசு வழங்கப்பட்டது. பின்பு 03.30 மணிக்கு ஈஸ்வரம்மா தினச் சிறப்பு பஜனை நடைபெற்றது, அதனைத் தொடர்ந்து பகவானுக்கு மஹா மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைந்தன.

இந்நிகழ்ச்சிகளில் மொத்தமாக 39 பாலவிகாஸ் குழந்தைகள், 07 பெற்றோர்கள், 20 மகளிர் மற்றும் 11 ஆண்கள் கலந்து கொண்டனர்.



## இல்லங்களில் சாயி பஜனை

**கன்னியாகுமரி** 23 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் ஒரு பாகமாக சாயி அன்பர்களின் வீடுகளில் பஜனை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. 17/05/2025 அன்று ஸாய் கலா (தேரூர்) அவர்களின் வீட்டிலும் 26/05/2025 அன்று ஸாய் ரமேஷன் பிள்ளை (ஸ்ரீ ஸத்ய ஸாய் ஸதன், குலசேகரன்புதூர்) அவர்களின் வீட்டிலும் மாலை 06.30 மணிக்கு பஜனை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் சாயி அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.





# மாதாந்திர மஹிளா தினம்

**கன்னியாகுமரி** 19.5.25 **14** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த வல்லன்குமாரவிளை ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் 19/05/2025 அன்று மாதாந்திர மஹிளா தினத்தை முன்னிட்டு சமிதியின் மகிளா அன்பர்களால் மாலை 6.30 மணிக்கு விளக்குபூஜை சிறப்பாக நடத்தப்பட்டது. ஓம்காரம் மற்றும் சாயி காயத்ரி பாராயணம் செய்தபின்பு விளக்குபூஜை தொடங்கியது. இறுதியாக மாலை 08.30 மணியளவில் பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கபட்டதோடு நிகழ்ச்சி நிறைவடைந்தது. நிகழ்ச்சியில் 12 மகளிர் மற்றும் 2 ஆண்கள் கலந்துகொண்டனர்.



# நாராயண சேவை மற்றும் வஸ்திரதானம்

கன்னியாகுமரி 26.5.25 13 பயனாளிகள்

6 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் ஒரு பாகமாக 26/05/2025 அன்று நண்பகல் 12.30 மணிக்கு சுமார் பத்து பேருக்கு நாராயண சேவை செய்யப்பட்டது. மாலை 06.45 மணிக்கு சமிதி அன்பர்கள் ஸாய் ஸ்ரீராம் மற்றும் ஸாய் இந்திரா அவர்களின் மூன்றாவது திருமண நாளை முன்னிட்டு மூன்று மகிளா அன்பர்களுக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் 7 பாலவிகாஸ் குழந்தைகள், 10 மகளிர் மற்றும் 01 ஆண் கலந்துகொண்டனர்.





# இலவச மருத்துவ முகாம்

ஈரோடு 17.5.25 25 பயனாளிகள்

நமது பகவானின் அருள் ஆசியோடு ஈரோடு மெயின் சமிதியின் கிராமப்புற சேவை பிரிவில் 17.5.25 அன்று தீரன் நகர் ஷீரடி பாபா கோவிலில் இலவச மருத்துவ முகாமானது நடைபெற்றது. திருமதி.டாக்டர்.உஷா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் 25 பேர் பயன் பெற்றனர். 5 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த இலவச மருத்துவ முகாம் மூலமாக இதுவரை சுமார் 3000 பேர் பயன் பெற்றுள்ளனர். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நம் சுவாமிக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.

# ஈஸ்வரம்மா தின சிறப்பு வழிபாடு

ஈரோடு 6.5.25

பகவானின் பெரும் கருணையினால் ஈரோட்டில் உள்ள எல்லா சமிதிகளிலும் ஈஸ்வரம்மா தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காந்தி நகர் சமிதியில் சிறப்பு பஜனையைத் தொடர்ந்து பாலவிகாஸ் குழந்தைகள் சாய் நவரத்னா மாலையைப் பாடினார்கள்.

அதன் பிறகு பாலவிகாஸ் குழந்தைகள் அவர்கள் பெற்றோர் மற்றும் குருமார்களுக்கு பாத பூஜை செய்தனர். பகவானுக்கு மங்களஹாரத்தி எடுத்து வந்திருந்த அனைவருக்கும் இரவு உணவு பிரசாதம் வழங்கப்பட்டது.

மூலப்பாளையம் சமிதியில் சிறப்பு பஜனை மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் நிகழ்ச்சியாக ஸ்ரீ சத்யசாயி நவரத்தின மாலை குழந்தைகளால் பாடப்பட்டது மற்றும் பெற்றோருக்கு பாத பூஜை செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ஈரோடு மெயின் சமிதியில் மாலை 6:15 மணிக்கு சிறப்பு பஜன் மற்றும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் நடைபெற்றது.





# சாயி கதா - இசை மற்றும் கலை நிகழ்ச்சி

ஈரோடு | 28.5.25 | 65 பயனாளிகள் | 65 சேவாதளத்தொண்டர்கள்

நம் பகவானின் அளப்பரிய பெருங்கருணையினால் கடந்த மே மாதம் 28ம் நாளன்று மாலை நமது ப்ரசாந்தி நிலையத்தில் உள்ள சாயி குல்வந்த் ஹாலில் ஈரோடு மாவட்டத்தின் 5வது பவித்ர பர்த்தி யாத்திரையில் நமது பாலவிகாஸ் முன்னாள் மாணவிகள் மற்றும் குழந்தைகளால் சாயி கதா என்கிற நாட்டிய நாடகம் இசை மற்றும் கலை நிகழ்ச்சி வடிவில் பகவானின் தாமரை மலர் பாதங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் 45 பாலவிகாஸ் பெண் குழந்தைகளும், 12 முன்னாள் மாணவிகளும் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் ஸ்வாமியின் 100வது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில் ஸ்வாமியின் சரிதத்தை பாடல்களாக, ஸ்வாமியின் மாத்ரு பாஷையில் அதாவது தெலுங்கு மொழியில் தங்களை பாட வைத்த ஸ்வாமிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், பகவானின் பாதாரவிந்தங்களை ஆனந்த கண்ணீரால் ஆராதனை செய்தனர்.





Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மே
2025

## சுந்தரத்தில் சிறப்பு பஜன்

ஈரோடு 3.5.25 **21** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 3/5/2025 அன்று சென்னையில் உள்ள சுந்தரத்தில் விடியற்காலை 1:00 மணி முதல் 3:00 மணி வரை 100 மணி நேர பஜனையில் ஈரோடு மாவட்ட பஜன் குழுவினர் கலந்து கொண்டு நம் பகவானுக்கு தங்கள் பக்தியை சமர்ப்பித்தனர். 2 மணி நேரத்தில் 36 பஜன் பாடல்களைப் பாடி மகிழ்ந்த சாயி அன்பர்கள் இந்த வாய்ப்பை அளித்த பகவானுக்கு தங்கள் நமஸ்காரங்களை சமர்ப்பித்து கொண்டனர். இதில் 13 மஹிளா அன்பர்கள் மற்றும் 8 ஆண்கள் கலந்து கொண்டனர்.





# நாராயண சேவை

ஈரோடு | 6.5.25 | 70 பயனாளிகள் | 5 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் ஈரோடு பாலாஜி கார்டன் சமிதியின் சார்பாக 6.5.25 அன்று ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு நாராயண சேவை கே.கே நகர் முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. இதில் 5 ஆண் சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டனர். இதில் 32 ஆண்கள் மற்றும் 38 பெண்கள் பயன் பெற்றனர். அவர்களுக்கு கிடைத்த மதிய உணவு சிறப்பாக இருந்ததாக கூறி மகிழ்ந்தனர் அங்கிருந்த முதியவர்கள். பகவானின் பிரசாதத்தை அனைவருக்கும் அளிக்கும் வாய்ப்பை அளித்த நம் பகவானுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள்.

# பர்த்தியில் கோலங்கள்

ஈரோடு 5.5.25

பகவானின் பெரும் கருணையினால் 5.5.25 அன்று புட்டபர்த்தி சேவை புரிய சென்ற மஹிளா அன்பர்களுக்கு ஈஸ்வரம்மா சமாதி முன்பு கோலம் போடும் வாய்ப்பு கிட்டியது. ஈரோடு, சேலம், திருப்பூர், சென்னை, திருச்சி, உடுமலை ஆகிய மாவட்ட மஹிளா அன்பர்கள் சேர்ந்து தங்கள் கைவண்ணத்தின் மூலம் கண்ணைக் கவரும் வகையில் அழகான கோலங்கள் போட்டு தங்கள் சேவையைப் புரிந்தனர்.





## பிரசாந்தி சேவை

ஈரோடு | மே மாதம் | 215 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் மே மாதம் புட்டபர்த்தியில் ஈரோடு மாவட்ட அன்பர்கள் கலந்து கொண்டு சேவை புரிந்தனர். முதல் குழுவில் 61 மஹிளா அன்பர்கள் மற்றும் 51 ஆண்கள் சேவை புரியும் பாக்கியத்தைப் பெற்றனர். இரண்டாவது குழுவில் 58 மஹிளா அன்பர்கள் மற்றும் 45 ஆண்கள் கலந்து கொண்டு தங்களுக்கு அளிக்கப்பட்ட சேவையைப் புரிந்து ஆன்மீக சாதனையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பகவானின் ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

## வாசகர் வட்டம்

ஈரோடு | 4.5.25 | 14 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிகளோடு வாசகர் வட்டம் இணையவழி மூலம் 4/5/2025 அன்று நடைபெற்றது. இதில் கீதாவாஹினியில் அத்தியாயம் 16 ல் உள்ள ஸ்லோகங்களுக்கு அழகாக விளக்கங்களும் மற்றும் சந்தேகங்களுக்கான விடைகளும் திரு.டாக்டர்.டி.எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் அழகாக சொல்லப்பட்டது. இதில் 14 அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# ஸ்ரீ சத்ய சாயி - சிவசக்தி ஸ்வரூபம் - பர்த்தி யாத்திரையில் நடைபெற்ற நாடகம்

ஈரோடு 27.5.25 **111** பயனாளிகள்

**111** சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவானின் பெருங்கருணையினால் ஈரோடு மாவட்டத்தின் 5வது பவித்ர பர்த்தி யாத்திரையில், நமது பாலவிகாஸ் குழந்தைகளால் ஸ்ரீ சத்ய சாயி - சிவசக்தி ஸ்வரூபம் என்கிற நாடகம் கடந்த மே மாதம் 27 ஆம் நாளன்று மாலை நமது ப்ரசாந்தி நிலையத்தில் உள்ள சாயி குல்வந்த் ஹாலில் பகவானின் பாதாரவிந்தங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் 91 ஆண் குழந்தைகளும் 20 பெண் குழந்தைகளும் மொத்தம் 111 பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் ஸ்வாமியின் 100வது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில் தங்களது நாடகத்தை ஸ்வாமிக்கு சமர்ப்பித்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்து ஸ்வாமிக்கு தங்களின் நன்றிகளை தெரிவித்தனர்.

இதில் கலந்து கொண்ட குழந்தைகள் அனைவரும் ப்ரசாந்தி நிலையத்திற்கு வந்தது இது தான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் ஸ்வாமிக்கு நன்றி

தெரிவிக்கும் வகையில், தாங்கள் எல்லோரும் பாலவிகாஸ் வகுப்புகளுக்கு தவறாமல் சென்று ஸ்வாமியின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரர்களாவோம் என்று உறுதி கொண்டுள்ளனர்.





## ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள்

**கிருஷ்ணகிரி & தர்மபுரி** 6.5.25 **100** பயனாளிகள்

மே மாதம் ஆறாம் தேதி கிருஷ்ணகிரி மெயின் சமிதியில் ஈஸ்வரம்பா தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பாலவிகாஸ் குழந்தைகள் தத்தம் பெற்றோருக்கு பாத பூஜை செய்தனர், மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சுமார் 26 பாலவிகாஸ் குழந்தைகள் இரண்டு சமிதிகளின் சார்பாக இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் 80 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

## நாராயண சேவை

கிருஷ்ணகிரி & தர்மபுரி 23.5.25 350 பயனாளிகள்

காலை 10.30 முதல் 11.30 வரை மருத்துவமனை சேவை – 50 நோயாளிகளுக்கு ரொட்டி மற்றும் சத்ய சாய்பாபா படத்துடன் விபூதி பொட்டலம் கொடுக்கப்பட்டது மதியம் 12 மணி முதல் 1 மணி வரை பஜனை பாடல்கள் பாடப்பட்டன. இதில் 25 மகிளாக்கள் மற்றும் 20 ஆண்கள் கலந்து கொண்டு பகவானின் அருள் பெற்றனர்.

அதை தொடர்ந்து 15 குழந்தைகளுக்கு, நோட்டு பேனா, பென்சில் மற்றும் இரப்பர் வழங்கப்பட்டது. மதியம் 1 மணி முதல் 2 மணி வரை நாராயண சேவை நடைபெற்றது. இதில் சுமார் 300 பொதுமக்கள் பயனடைந்தனர்.

# பெற்றோர்களுக்கு பாதபூஜை

சேலம் 11.5.25 80 பயனாளிகள் 80 சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வராம்பா தின நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, சேலம் மாவட்ட அளவிலான பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு பாதபூஜை செய்யும் நிகழ்ச்சி கடந்த 11/05/2025 அன்று சேலம் டவுன் சமிதியில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு தொடங்கி குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு பாதபூஜை செய்தல் மற்றும் சாயி பெற்றோர்மை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதியம் 12:30 மணிக்கு மஹா மங்கள ஆரத்தியுடன் நிறைவுபெற்றது.

இதில் 30 பாலவிகாஸ் குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள், குருமார்கள் மற்றும் சமிதி உறுப்பினர்கள் என 80 நபர்கள் கலந்து கொண்டனர். ஸ்வாமியின் திருவருளால் அனைத்து நிகழ்ச்சிகளும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.



# 100 நாள் கிருஹ பஜனை

தஞ்சாவூர் | 01-05-2025 to 31-05-2025 | 120 பயனாளிகள் | 120 சேவாதளத்தொண்டர்கள்

நம் ஸ்வாமியின் 100வது பிறந்தநாள் விழாவினை ஒட்டி கும்பகோணம் சமிதியின் சார்பாக 100 நாள் சிறப்பு பஜனை நம் பாலவிகாஸ் குருமார்களின் இல்லங்கள், பாலவிகாஸ் முன்னாள் மாணவர்களின் இல்லங்கள், பாலவிகாஸ் குழந்தைகளின் இல்லங்கள் என அனைவரின் இல்லங்களிலும் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும் சுவாமி தன் அங்கி மற்றும் பாதுகையின் மூலம் வருகை தருகிறார். இந்த பஜனைகளில் பங்கேற்பதற்காக பாலவிகாஸ் குழந்தைகள் தத்தம் குருமார்களிடம் புது புது பஜனைகளை கற்றுக்கொண்டு அதனை சிறந்த முறையில் பாடுவதற்காக பயிற்சியும் செய்து நல்முறையில் பஜனைகளைப் பாடி மகிழ்கின்றனர்.

பஜனையின் முடிவில் குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. மிகவும் உற்சாகத்துடன் பாலவிகாஸ் மாணவர்களும் குருமார்களும் பங்கேற்று வருகின்றனர்.



# அமிர்த கலசம் விநியோகம்

தஞ்சாவூர் | 29.5.25 | **12** பயனாளிகள்

**15** சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக கும்பகோணம் சமிதியால் 2025 மே 29 அன்று பயனாளர்கள் 12 பேருக்கு "சாய் அம்ருத கலசம்" பைகள் வழங்கப்பட்டன. பயனாளிகளைத் தவிர 15 சேவாதள தொண்டர்களும் பக்தர்களும் பங்கேற்றனர்.

# ஆன்மீக சாதனா முகாம்

தஞ்சாவூர் | 4.5.25 | 5 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தெய்வீக அருளுடன், ஆன்மீக சாதனா முகாம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி மெஹர்நோன்புச்சாவடியில் 04.05.2025 அன்று நிகழ்த்தப்பட்டது. 20 சாய் அன்பர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.



# இலவச கண் சிகிச்சை மறுஆய்வு முகாம்

தஞ்சாவூர் | 17/5/2025 , 15/5/2025 | **500** பயனாளிகள்

**45** சேவாதளத்தொண்டர்கள்

பகவானுடைய அருளால் 17.05.2025 அன்று இலவச கண் சிகிச்சை முகாம் இனிதே நடைபெற்றது. 266 பயனாளிகள் இம் முகாமில் கலந்து கொண்டனர்.150 கண்புரை நோயாளிகள் இம் முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று பேருந்துகளில் மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முகாமில் 3 மருத்துவர்கள், 6 உதவியாளர்கள், 30 சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டனர். முகாம் இனிதே நடைபெற்றது. பகவானுடைய அருளால் 15.05.2025 அன்று கண் மறு பரிசோதனை முகாம் இனிதே நடைபெற்றது. 34வது முகாமில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட 166 நோயாளிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டனர். இதில் 15 சேவாதள தொண்டர்கள் பங்கேற்றனர்.





## ஈஸ்வரம்மா தின கொண்டாட்டங்கள்

தஞ்சாவூர் 6.5.25 61 பயனாளிகள்

48 சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வராம்பா தினத்தை முன்னிட்டு கும்பகோணம் சமிதியின் சார்பில் குடந்தை அரசு மருத்துவமனையில் ஈஸ்வரம்மா பிறந்த தினத்தில் பிறந்த குழந்தைகளுக்கு புத்தாடை அவர்தம் பெற்றோர்களுக்கு புடவை ஆகியன வழங்கப்பட்டன. இந்த சேவையில் 4 மகளிர், 3 ஆண்கள் & குரூப் 4 மாணவர்கள் 6 பேர் கலந்து கொண்டனர். மேலும் கொடைக்கானல் சாய் ஸ்ருதியில் நடந்த ஈஸ்வரம்மா தின கொண்டாட்டத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 22 பாலவிகாஸ் மாணவர்கள் அடங்கிய குழு கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்றது. 19 குருமார்கள், பெற்றோர் மற்றும் சேவாதள தொண்டர்களும் இதில் கலந்து கொண்டனர்.



# ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள்

தஞ்சாவூர் 4.5.25 55 பயனாளிகள்
45 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் இந்த ஆண்டு ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு தஞ்சை மஹர்நோன்பு சாவடி சமிதியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் சமிதியை சேர்ந்த பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். வில்லுப்பாட்டு, நாடகம் மற்றும் பஜனைகள் ஆகியவற்றை மிகவும் சிறப்பாக அரங்கேற்றினர். அங்கு கூடி இருந்த அனைத்து சாயி அன்பர்களும் பாலவிகாஸ் மாணவர்களுக்கு பாராட்டினை தெரிவித்தனர். அதை தொடர்ந்து குழந்தைகளுக்கு சுவாமியின் பிரசாதமும் பரிசு பொருட்களும் வழங்கப்பட்டன. பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.





## ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள் - கொடைக்கானல்

தஞ்சாவூர் | 4.5.25 | 40 பயனாளிகள் | 40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் இந்த ஆண்டு ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு கொடைக்கானலில் உள்ள நம் ஸ்வாமியின் சாயி ஸ்ருதியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் கும்பகோணம் சமிதியை சேர்ந்த பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

குழுப்பாடல், நாடகம் மற்றும் மைம் ஆகியவற்றை மிகவும் சிறப்பாக அரங்கேற்றினர். அங்கு கூடி இருந்த அனைத்து சாயி அன்பர்களும் பாலவிகாஸ் மாணவர்களுக்கு பாராட்டினை தெரிவித்தனர்.

அதை தொடர்ந்து குழந்தைகளுக்கு சுவாமியின் பிரசாதமும் பரிசு பொருட்களும் வழங்கப்பட்டன. பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.





## ஈஸ்வரம்மா தினம் சிறப்பு பஜனை

தஞ்சாவூர் | 6.5.25 | 42 பயனாளிகள் | 42 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் ஈஸ்வரம்மா தினம் கும்பகோணம் சமிதியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கலியுக அவதாரமான நம் அன்பு ஸ்வாமியின் தாயான ஈஸ்வரம்மாவின் நினைவு நாளை ஒவ்வொரு ஆண்டும் மே 6ஆம் தேதி ஈஸ்வரம்மா தினமாக கொண்டாடி வருகிறோம். நம் ஸ்வாமி, தாயை கடவுளாக மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. காலையில் நகரசங்கீர்த்தனத்துடன் நாள் தொடங்கியது. ஸாயி பக்தர்களும் பாலவிகாஸ் குழந்தைகளும் நகர சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து மாலை சிறப்பு பஜனையும் நடைபெற்றது. பாலவிகாஸ் குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.





# உழவாரப்பணி

தஞ்சாவூர் 3.5.25 **10** பயனாளிகள்

**30** சேவாதளத்தொண்டர்கள்

வெளிப்புறத் தூய்மை அகத்தூய்மையை உண்டாக்கும். அகத்தூய்மையே தெய்வீக அருளுக்கு வழி வகுக்கும் என்பதை உணர்த்தும் விதமாக ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி மெஹர்நோன்புச்சாவடி சார்பாக 03.05.2025 அன்று உழவாரப்பணி நடைபெற்றது. 15 பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் 15 சேவாதளத் தொண்டர்களும் கலந்து கொண்டு இறையருள் பெற்றனர்.



## காயத்ரி மந்திர ஜபம்

தஞ்சாவூர் | 1.5.25 | 8 பயனாளிகள் | 16 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தெய்வீக அருளுடன், காயத்ரி மந்திர ஜபம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி மெஹர்நோன்புச்சாவடியில் 01.05.2025 அன்று நிகழ்த்தப்பட்டது. 16 பாலவிகாஸ் குழந்தைகள் கலந்துகொண்டனர்



# பாலவிகாஸ் பஜனை

தஞ்சாவூர் 24.5.25 **45** பயனாளிகள்

**45** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை அன்று கும்பகோணம் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா சமிதியில் பாலவிகாஸ் மாணவர்களால் ஸாயி பஜனை சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. மே மாதத்தின் பாலவிகாஸ் பஜனை, 24ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. பாலவிகாஸ் பாடத்திட்டத்தில் அல்லாத பிற பஜனை பாடல்களை பாலவிகாஸ் மாணவர்கள் கற்றுக் கொண்டு உற்சாகத்துடன் பாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் மாணவர்கள், முன்னாள் பாலவிகாஸ் மாணவர்கள், குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் சாயி அன்பர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.



# பிரேம தரு

தஞ்சாவூர் 25.5.25 **10** பயனாளிகள்

**4** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் 25.5.2025 அன்று வேம்பனூரில், சுவாமி தயானந்தா கல்லூரி, மஞ்சக்குடியைச் சேர்ந்த என்.எஸ்.எஸ் தன்னார்வலர்களின் ஒருங்கிணைப்புடன் 25 மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் நான்கு சேவாதளத் தொண்டர்களும் 10 கிராம மக்களும் பங்கேற்றனர்.



# முதியோர் இல்ல சேவை

தஞ்சாவூர் 27.5.25 **32** பயனாளிகள்

**2** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் தஞ்சை மஹர்நோன்புசாவடி சமிதி சார்பாக 27.05.2025 அன்று ஆதரவற்ற முதியோர் இல்லம், வலங்கைமானில் உள்ள 32 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.



# 100 இல்லங்களில் சிறப்பு பஜன்

திண்டுக்கல்

10, 12, 21, 22, 30 & 31.05.2025

149 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 100 இல்லங்களில் சிறப்பு சாய் பஜன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது. 39வது சிறப்பு பஜன் திரு. தேவகுமார் சாய்ராம், திண்டுக்கல் - 10.05.2025, 40வது சிறப்பு பஜன் திரு. சதீஷ்குமார் சாய்ராம், திண்டுக்கல் - 12.05.2025,

41வது சிறப்பு பஜன் திருமதி. சாருமதி சாய்ராம், பழநி - 21.05.2025, 42வது சிறப்பு பஜன் திருமதி. கௌரி சாய்ராம், பழநி - 21.05.2025, 43வது சிறப்பு பஜன் திருமதி. மகேஸ்வரி சாய்ராம், திண்டுக்கல் - 22.05.2025,

44வது சிறப்பு பஜன் அன்னை நகர் கற்பக விநாயகர் கோயில், திண்டுக்கல் - 30.05.2025, 45வது சிறப்பு பஜன் திருமதி. தேவி சாய்ராம், திண்டுக்கல் - 31.05.2025.




Shot on OnePlus

## 100 பஜனைப் பாடல்கள் சிறப்பு நிகழ்ச்சி

திண்டுக்கல்

25.5.25

45 பயனாளிகள்

5 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 25-05-25 ஞாயிற்று கிழமை அன்று திரு.சண்முகம் சாய்ராம் இல்லத்தில் காலை 09.00 மணி முதல் மதியம் 03.30 மணி வரை 6 வது 100 பஜன் பாடல்கள் பகவான் அவர்களது பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பால விகாஸ் குழந்தைகள், பெற்றோர், சமிதி உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் என 45 நபர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் .

# அன்னையர் தினம்

திண்டுக்கல் 11.5.25 18 பயனாளிகள்

18 சேவாதளத்தொண்டர்கள்

நம் பகவானின் பேரருளால் மே மாதம் 1ம் தேதி ஞாயிறு அன்று பழனி சமிதி சார்பில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. நம் அன்பு ஸ்வாமியின் தெய்வீகத் தாயாகிய ஈஸ்வரம்மா தினத்தினை ஒட்டி, அன்னையர் தினத்தில் பழனி பாலவிகாஸ் குழந்தைகள் தங்களது அன்னைக்கு அவரவர்கள் இல்லங்களில் வைத்து பாதபூஜை செய்தார்கள். மொத்தம் 18 பேர்கள் கலந்து கொண்டார்கள்.



## இலவச மருத்துவ முகாம்

திண்டுக்கல் 25.5.25 **2** பயனாளிகள் **25** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 25-05-25 காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை இலவச பொது மருத்துவ முகாம் டி. வாடிப்பட்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 2 மஹிளாக்கள் 1 ஆண் சேவாதள தொண்டர் மற்றும் 25 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.






# ஈஸ்வரம்மா தினம்

திண்டுக்கல் 6.5.25 25 பயனாளிகள்

25 சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு, திண்டுக்கல் மஹாலக்ஷ்மி நகர் EB காலனி பாலவிகாஸ் குழந்தைகள், வேதம், ஸ்லோகம் மற்றும் பஜனை செய்து சிறப்பாக கொண்டாடினார்கள். பாலவிகாஸ் குழந்தைகள், குருமார்கள், பெற்றோர்கள் என 25 பேர்கள் கலந்து கொண்டார்கள். பங்கு பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்வாமியின் அருளால் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.






# கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா

திண்டுக்கல் 7.5.25 **20** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 07.05.2025 அன்று பழனி அங்கன்வாடிக்கு வருகை தரும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு பொருட்கள் வழங்கி சேவையாற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மகிளாஸ் 20 பேர் கலந்துகொண்டு சேவையாற்றினர்.



# சிறப்பு நகர சங்கீர்த்தனம்

**திண்டுக்கல்** 18.5.25 **19** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 18-05-25 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நகர சங்கீர்த்தனம் மகாலட்சுமி நகர் சமிதியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மஹிளாக்கள் 10 பேர் மற்றும் 9 ஆண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



## நீர் மோர் சேவை

திண்டுக்கல் 17.5.25 **35** பயனாளிகள்

**35** சேவாதளத்தொண்டர்கள்

வெயில் காலத்தை முன்னிட்டு பழனி பாலவிகாஸ் குழந்தைகள் சாலையில் தார் ரோடு பாரமாரிக்கும் பணியாளர்களுக்கு கடந்த 17-05-2025 அன்று நீர் மோர், பிஸ்கட் போன்றவற்றை வழங்கினர்கள். கொதிக்கும் வெய்யிலுக்கு நீர் மோர் தந்தது அந்த பணியாளர்களுக்கு மிகவும் இதமாக இருந்தது. பாலவிகாஸ் குழந்தைகள், குருமார்கள் 10 பேர்கள் கலந்து கொண்டார்கள். மொத்த பயனாளிகள் 35 பேர். இந்நிகழ்ச்சி பாலவிகாஸ் மாணவர்களிடையே பிறருக்கு உதவ வேண்டும் என்ற நற்சிந்தனையை ஊக்குவிக்கும் விதமாக இருந்தது.



## 100 பஜனை பாடல்கள் பாடும் நிக்ழ்ச்சி

**திருச்சி** 18.5.25 **100** பயனாளிகள் **53** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் சத வருஷ நிக்ழ்ச்சியின் ஒரு பகுதியாக 18/5/2025 அன்று சுவாமியின் பெரும் கருணையால் திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சியில் சுவாமியின் 100 பஜன்கள் பாடும் நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மெயின் சமிதி, திருச்சி கல்லுக்குழி சமிதி, கே கே நகர் சமிதியை சார்ந்த சமிதி உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தார்கள். இதில் கீழ்க்கண்ட விவரப்படி பாலவிகாஸ் மாணவ மாணவிகள் 15 பேரும், மகிளாக்கள் 23 பேரும், ஆண்கள் 15 பேரும் மொத்தம் 53 பேர்கள் கலந்து கொண்டனர். 100 நபர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.



## நாராயண சேவை

**திருச்சி** **72** பயனாளிகள் **6** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையுடன் 17-05-25 அன்று புதுக்கோட்டை மெயின் சமிதி சார்பாக புதுக்கோட்டை கட்டியாவயல் கிராமத்தில் நாராயண சேவை (தயிர் சாதம்) வழங்கப்பட்டது. பயனாளர்கள் எண்ணிக்கை:72. சேவாதள் எண்ணிக்கை:06.

பகவானின் அளவற்ற பெருங்கருணையால் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சமிதியினரால் நடத்தப்படும் தன்னலமற்ற சேவையான ஸ்ரீ சத்திய சாய் நித்திய நாராயண சேவை 6 மே 2025 அன்று ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது. இந்த சேவையானது கோவிட் இருந்த அந்த நாட்களில் சாயி அமுதம் என்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நித்திய நாராயண சேவை இன்றுவரை நடைபெற்று வருகிறது.

தினமும் 50 முதல் 200 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சமைப்பதற்கு ஸ்ரீரங்கம் சமிதியை சேர்ந்த மகிளா சேவாதள தொண்டர்களும், பொட்டலங்கள் போட்டு கொடுப்பதற்கு ஆண் சேவாதள தொண்டர்களும் தினமும் மிகவும் உறுதுணையாக உள்ளனர். சுவாமியின் சங்கல்பம் இல்லாமல் இவ்வளவு பெரிய நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்க முடியாது.

## ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சி

**திருச்சி** 6.5.25 **145** பயனாளிகள் **4** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் 6.5.25 ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு அன்று பிறந்த குழந்தைகளுக்கும், அவர்தம் தாய்மார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் புதிய ஆடைகள் வழங்கப்பட்டன. 145 தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் புதிய ஆடைகள் கே.கே நகர், கல்லுக்குழி மற்றும் பிச்சாண்டார் கோவில் சமிதி சார்பாக வழங்கப்பட்டன. இதில் 4 மகிளா சேவாதளத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# மகிளா தின சேவை

திருச்சி 19.5.25

பகவானின் பெரும் கருணையினால் 19.5.25 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மெயின் சமிதி சார்பாக நேசக்கரம் முதியோர் இல்லத்தில் நாற்பத்தி ஐந்து நபர்களுக்கு இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. திருச்சி கே கே நகர் சமிதி சார்பாக அன்னை முதியோர் இல்லம், அன்னை குழந்தைகள் காப்பகம் மற்றும் பார்வையற்றோர் பள்ளி முதலிய இடங்களுக்கு 1040 இட்லிகள் வழங்கப்பட்டன. ஸ்ரீரங்கம் சமிதி சார்பாக 1250 இட்லிகள் சாம்பாருடன், லூப்ரா தாமஸ் பிளைண்ட் ஹோமுக்கு வழங்கப்பட்டன.



## தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா நினைவு நாள்

திருநெல்வேலி 31-04-2025 92 பயனாளிகள்

84 சேவாதளத்தொண்டர்கள்

தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா நினைவு நாளை முன்னிட்டு தென்காசி மற்றும் திருநெல்வேலி சமிதிகளில் பெற்றோர்களுக்கு பாத பூஜை மற்றும் கலைநிகழ்ச்சிகள் உடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதில் 40 பால விகாஸ் குழந்தைகள், 26 பெற்றோர்கள், மற்றும் 18 சாயி அன்பர்கள் கலந்து கொண்டனர். அஷ்டோத்ரம், பஜனை, சத்சங்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பகவானுக்கு மங்கள ஆரத்தியுடன் நாராயண சேவையும் நடைபெற்றது.

தெய்வீக அன்னை ஈஸ்வராம்பாவின் தினத்தை முன்னிட்டு பாலவிகாஸ் மாணவர்கள் தமது பெற்றோருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் அவர்களின் தியாகத்திற்கு நன்றி தெரிவிக்கும்படியாகவும் பாத பூஜை செய்து அவர்களின் ஆசிகளை பெற்றனர்.


2025/04/28 18:26

## நீர் மோர் வழங்குதல்

திருநெல்வேலி | 5.5.25 | 100 பயனாளிகள் | 12 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவானின் பெருங்கருணையால் கடந்த 05-05-2025 திங்கட்கிழமை அன்று திருநெல்வேலி ரயில் நகர் சமிதியை சார்ந்த பாலவிகாஸ் குழந்தைகளால் சுமார் 100 பொது மக்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது. இச்சேவையில் 12 சேவாதள் கலந்து பயன் பெற்றனர். கலந்து கொண்ட அனைவரும் பகவானின் பேரருளால் கோடை வெயிலில் நீர்மோர் பருகி பயனடைந்தனர்



## ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டம்

திருநெல்வேலி 6.5.25 31 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பூரண அருளாசியுடன், 06.05.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று, திருநெல்வேலி மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்கள் சார்பாக, அன்னை ஈஸ்வரம்மா தினம் வண்ணார்பேட்டை சமிதியில் பக்தி பூர்வமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில், சிறப்பு பஜனை மற்றும் அன்னை ஈஸ்வரம்மாவின் ஆன்மிக வாழ்க்கைச் சிறப்புகள் குறித்து சத்சங்கம் நடத்தப்பட்டது இதில் மாவட்டத் தலைவர் உட்பட 17 மகிளா அங்கத்தினர்கள், 12 ஆண் அங்கத்தினர்கள் இணைந்து பங்கேற்று சிறப்பித்தனர்.






# 100 பஜனை பாடல்கள்

திருப்பூர் | 23.5.25 | 50 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 23.05.2025 வெள்ளிக்கிழமை அன்று நல்லூர் பஜனா மண்டலியில் பகவானுக்குப் பிரியமான பஜனைப் பாடல்கள் 100 பாடி பகவானை மகிழ்வித்தோம். காலை சரியாக 8 மணிக்கு பஜனை தொடங்கி மதியம் 1.30 மணிக்கு நிறைவடைந்தது. இந்நிகழ்ச்சியில் 30 மஹிளாக்கள், 20 ஆடவர்கள் கலந்து கொண்டனர். இந்த வைபவத்தை பகவானின் 100வது பிறந்த நாள் வைபவமாக பகவானின் பாதங்களில் சமர்பிக்கிறோம்.





# 108 கோவில்களில் ருத்ர பாராயணம்

**திருப்பூர்** **275 சேவாதளத்தொண்டர்கள்**

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்சவ கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக நமது திருப்பூர் மாவட்டத்தில் 108 கோவில்களில் ருத்ர பாராயணம் செய்வது என முடிவு செய்யப்பட்டு, இனிதாக நடந்து வருகிறது.

24 ஆவது ருத்ர பாராயணம் திருப்பூர் குப்பன செட்டியார் வீதியில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் உண்ணாமலை உடனமர் அண்ணாமலையார் சன்னதி முன்பு 38 நபர்களுடன் நடைபெற்றது.
25 ஆவது ஏகாதச ருத்ர பாராயணம் திருப்பூர் திருமுருகன் பூண்டியில் உள்ள முயங்கு பூன்முலை வல்லியம்மை உடனமர் ஸ்ரீ திருமுருக நாதசுவாமி ஆலயத்தில் 60 நபர்களுடன் நடைபெற்றது.
26 ஆவது பாராயணம் திருப்பூர் திருமுருகன் பூண்டியில் உள்ள மங்களாம்பிகை உடனமர் ஸ்ரீ மாதவனேஸ்வரர் ஆலயத்தில் 49 நபர்களுடன் நடைபெற்றது.

27 ஆவது ருத்ர பாராயணம் திருப்பூர் இடுவம்பாளையத்தில் அமைந்துள்ள செல்வ விநாயகர் ஆலயத்தில் பெரியநாயகி சமேத ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் 46 நபர்களுடன் நடைபெற்றது.
28 ஆவது ருத்ர பாராயணம் திருப்பூர் ஹவுசிங் யூனிட்டில் அமைந்துள்ள அரசரடி செல்ல விநாயகர் ஆலயத்தில் உண்ணாமுலை உடனமர் அண்ணாமலையார் சன்னதி முன்பு 26 நபர்களுடன் நடைபெற்றது.

29 ஆவது ஏகாதச ருத்ர பாராயணம் உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் கடத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ அர்ஜுனேஸ்வரர் ஆலயத்தில் 50 நபர்களுடன் நடைபெற்றது.
30 ஆவது ருத்ர பாராயணம் உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் கடத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ நடராஜர் ஆலயத்தில் 50 நபர்களுடன் நடைபெற்றது.



# 108 திருவிளக்கு பூஜை

திருப்பூர் 77 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் நூறாவது பிறந்த தின ஜன்மோத்ஸவ கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக, நமது திருப்பூர் மாவட்டத்தில் 108 கோவில்களில் திருவிளக்கு பூஜை நடந்து வருகிறது.

பத்தாவது திருவிளக்கு பூஜை திருப்பூர் குப்பண்ண செட்டியார் வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் 27 நபர்களுடன் நடைபெற்றது. 11 வது திருவிளக்கு பூஜை திருப்பூர் எஸ்ஏபி பஸ் ஸ்டாப்பில் அமைந்துள்ள ஸ்ரீ சௌடேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 70 நபர்களுடன் நடைபெற்றது

# இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் 4.5.25 197 பயனாளிகள் 30 சேவாதளத்தொண்டர்கள்

அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய கிருபையால் திருப்பூர் ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில் மாதம் தோறும் நடைபெறும் இலவச கண் சிகிச்சை முகாம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கண் பரிசோதனை செய்யப்பட்டவர்கள் : 197,
அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் : 60
கண் கண்ணாடி வழங்கியது: 77
சேவையில் இளைஞர்கள் மகிளா சகோதரிகள் சேவாதள தொண்டர்கள் என 30 பேர் கலந்து கொண்டார்கள்.

# ஈஸ்வரம்மா தின கலை நிகழ்ச்சிகள்

திருப்பூர் | 1.5.25 | **300** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் ஆசியுடன் திருப்பூர் மாவட்டத்தில் ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு 1/5/25 அன்று பாலவிகாஸ் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. நிகழ்ச்சியில் 125 குழந்தைகள், 160 பெற்றோர், 12 குருமார்கள், 10 பொறுப்பாளர்கள், மற்றும் சமிதி உறுப்பினர்கள் என 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



# ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகள்

திருப்பூர் 6.5.25 100 சேவாதளத்தொண்டர்கள்

06.05.2025 அன்று நம் பகவானின் பெருங்கருணையினால் உடுமலை டி.வி.பட்டிணம் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் ஈஸ்வரம்மா தின வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

இதில் வேதம், சிறப்பு சாய் பஜன், பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடைபெற்றன. பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு பாத பூஜைகள் செய்து அவர்களை மகிழ்வித்தனர்.

மேலும் பால விகாஸ் குழந்தைகளுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சாய் அன்பர்கள், பால விகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர் என 100 பேருக்கும் மேல் கலந்து கொண்டு பகவானின் பேரருளினைப் பெற்றனர்.

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் ஆசியுடன் 6/5/25 அன்று மாலை ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு திருப்பூர் ராம் நகர், மந்திரில் சாய் பஜன் நடைபெற்றது. ராம் நகர் சமிதி பால விகாஸ் குருமார்கள் 3 நபருக்கு அமிர்த கலசங்களை வழங்கினர்.


ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ்

# கோடைகால ஆன்மீகப் பண்பாட்டு பயிற்சி முகாம்

திருப்பூர்

120 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் ஆசியுடன் திருப்பூர் மாவட்டத்தில் பாலவிகாஸ் குழந்தைகளுக்கான கோடை கால ஆன்மீக பண்பாட்டு பயிற்சி முகாம் 28/5/25 முதல் 30/5/25 வரை 3 நாட்கள் தொடர்ந்து வெகு சிறப்பாக நடைபெற்றது. 3 நாட்களும் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் சிறப்புரைகள், ஆன்மீகம், விளையாட்டுகள் என சிறப்பாக அமைந்திருந்தன. தொடர்ந்து 3 நாட்கள் கலந்து கொண்ட 71 குழந்தைகளுக்கு சான்றிதழ்களை திருப்பூர் மாவட்டத் தலைவர் வழங்கினார். 12 குருமார்கள், 5 பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள், 7 பெற்றோர் மற்றும் சமிதி உறுப்பினர்கள் என 120 பேர் தினமும் கலந்து கொண்டனர்.

# பல்லக்கு சேவை

திருப்பூர் 11.5.25 **50** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு சித்திரை மாத பௌர்ணமியை முன்னிட்டு பல்லக்கு சேவை நமது காந்திநகர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி அமைப்பாளர் திரு ராஜேந்திரன் சாய்ராம் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் சாயி சகோதர சகோதரிகள் இளைஞர்கள் என 50 பேருக்கு மேல் கலந்து கொண்டார்கள்.

# முதியோர் இல்ல சேவை

திருப்பூர் 1.5.25 25 சேவாதளத்தொண்டர்கள்

01.05.2025 அன்று வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நமது உடுமலை சாய் சமிதிகளில் பாலவிகாஸ் கல்வி பயின்று வரும் குழந்தைகள் கோமங்கலமத்தில் உள்ள ஆதரவற்ற முதியவர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல் செய்தும் அவர்களுக்கு இனிப்புகள், பழங்கள் மற்றும் நொறுக்குத்தீனிகள் கொடுத்து மகிழ்வித்தனர்.

இந்நிகழ்ச்சியினை ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்கள் தமிழ்நாடு தெற்கு திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையைச் சார்ந்த பொறுப்பாளர்கள் மற்றும் குருமார்கள் ஏற்பாடு செய்தும், கலந்தும் சிறப்பித்தனர். மேலும் பால விகாஸ் மாணவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டு முதியோருக்கு மதிய உணவு கொடுத்து மகிழ்வித்தனர்.





# முதியோர் இல்லத்தில் சேவை

திருப்பூர்

28 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியோடு அன்னை ஈஸ்வரம்பா தினத்தை முன்னிட்டு பல்லடம் ரோடு யூனிட் 2 பாலவிகாஸ் மற்றும் சத்யா காலனி இணைந்து ஊத்துக்குளி ரோடு பெரியபாளையம் கருணை இல்லம் முதியோர் இல்லம் சென்று முதியோருக்காக பிரார்த்தனை செய்தனர், மற்றும் உணவுப்பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் மாணவர்கள் ஏழு பேர் குருமார்கள் இரண்டு பேர் சமிதி உறுப்பினர்கள் ஆறு பேர் மொத்தம் 15 பேர் கலந்து கொண்டனர்.

பகவான் பாபாவின் ஆசியுடன் 10/5/25 மாலை திருப்பூர் மாவட்ட ராம் நகர் சமிதி, குரு தமிழரசி சாய்ராம் மற்றும் பாலவிகாஸ் மாணவர்கள் தமிழா முதியோர் இல்லம் சென்று பெரியோர்களுடன் உரையாடியும், ஆடி பாடியும், உணவு பொருட்களை வழங்கியும் மகிழ்ந்தனர். முதியோர்கள் மனமகிழ்ந்து குழந்தைகளுக்கு ஆசிகளை வழங்கியதை கண்டு நெகிழ்ந்தனர்.



## கிரிவலம் வரும் பக்தர்களுக்கு மோர் வழங்கும் சேவை

திருவண்ணாமலை | 12.5.25 | **480** பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருளால், 12.05.2025 அன்று சித்ரா பௌர்ணமி தினத்தில், 480 கிரிவல பக்தர்களுக்கு மோர் வழங்கும் புனித சேவை நடைபெற்றது.

# கிரிவலம் வரும் பக்தர்களுக்கு பால் பிரசாதம் வழங்கும் சேவை

**திருவண்ணாமலை** 12.5.25 **1200** பயனாளிகள்

**13** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திருவருளால், 12.05.2025 சித்ரா பௌர்ணமி அன்று 1,200 கிரிவல பக்தர்களுக்கு பால் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த சேவையில் 7 மகளிர், 4 ஆண்கள் மற்றும் 2 பாலவிகாஸ் குழந்தைகள் உட்பட மொத்தம் 13 நபர்கள் கலந்து கொண்டனர்.

# மருத்துவ முகாம் சேவை

திருவண்ணாமலை 11.5.25 83 பயனாளிகள்

6 சேவாதளத்தொண்டர்கள்

திருவண்ணாமலை ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி, வைப்பூர் பஜனா மண்டலியின் வழிகாட்டுதலில், 11.05.2025 அன்று தன்வந்திரி திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் தொடர்பான நோய்களுக்கு 33 ஆண்கள், 50 பெண்கள் என மொத்தம் 83 நபர்களுக்கு இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த முகாமில் 1 மருத்துவர், 4 மருந்தாளுனர்கள், 3 செவிலியர்கள், 3 மகிளா மற்றும் 6 ஆண் சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர்.

## 100 மணி நேர அகண்ட பஜனை

திருவண்ணாமலை 1.5.25

01/05/2025 அன்று காலை 2.00 மணி முதல் 3.00 மணி வரை (1 மணி நேரம்), நமது பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் அருட்பெரும் கருணையினால் சென்னை சுந்தரத்தில் நடைபெற்ற 100 மணி நேர அகண்ட பஜனை விழாவில், நமது திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த சாய் அன்பர்கள் பங்கேற்று, பகவான் முன்னிலையில் பக்திபூர்வமாக பஜனை பாடல்களை பாடி ஆனந்தமடைந்தனர்.





# இணையவழி வேத வகுப்புகள்

**திருவண்ணாமலை** 1.5.25 **25** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால், வேங்கிக்கால் சமிதி சார்பாக இணையவழி வேத வகுப்பை மாவட்டத் தலைவர் திரு. சுப்பிரமணியன் சாய்ராம் தொடங்கி வைத்தார். வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் 8 மணி வரை நடைபெறும் இவ்வகுப்பிற்கு மரியாதைக்குரிய பிரசாந்தி சாய்ராம் அறிமுக உரை நிகழ்த்தினார். இவ்வகுப்பில் 25 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டம்

திருவண்ணாமலை 6.5.25 28 பயனாளிகள் 17 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நல்லாசியால், 06.05.2025 அன்று வேங்கிக்கால் சமிதி சார்பில் ஈஸ்வரம்மா தினம், பாலவிகாஸ் குழைந்தைகளால் உணர்வூட்டும் விதமாக நடைபெற்றது. காலை நிகழ்ச்சி, ஓம்காரம் மற்றும் சுப்ரபாதத்துடன் தொடங்கப்பட்டது. பின்னர் மோகஞ்சி முதியோர் இல்லத்தில், சிறப்பு பால்விகாஸ் பஜனை மற்றும் “தாயும் மகனும்” என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது. பால்விகாஸ் குழந்தைகள், தாத்தா–பாட்டிமார்களுக்கு வஸ்த்ரங்கள் மற்றும் பிஸ்கட் வழங்கி, அவர்களிடமிருந்து ஆசிகள் பெற்றனர். மதியம் நாராயண சேவை நடைபெற்றது. பங்கேற்பு விவரம்: பால்விகாஸ் குழந்தைகள் – 8, ஆண் சேவாதாளத்தொண்டர்கள் – 5, பெண் சேவாதாளத்தொண்டர்கள் – 4, பெரியோர் – 28.





# ஈஸ்வரம்மா தினக் கொண்டாட்டம்

**திருவண்ணாமலை** 6.5.25 **360** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

06.05.2025 – அன்று காலை, திருவண்ணாமலை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு தலைமை மருத்துவமனையில், 360 நபர்களுக்கு நமது பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் அருட்பெரும் கருணையால் திருவண்ணாமலை சமிதி சார்பாக பிஸ்கட் பாக்கெட்டுகள் பிரசாதமாக வழங்கப்பட்டன. இச்சேவைப் பணியில், ஆண் சேவாதளத்தொண்டர்கள் – 3 மகிளா சேவாதளத்தொண்டர்கள் – 2 என மொத்தம் 5 சேவாதளத்தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## 100 வீடுகளில் பஜனை

**திருவண்ணாமலை**

நமது அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் அருட்பெரும் ஆசிர்வாதத்துடன், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சமிதி சார்பில், 100 இல்லங்களில் பஜனை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்து இல்லங்களிலும் பகவானின் தெய்வீக மலரான சனாதன சாரதி மாத இதழ் வழங்கப்பட்டு, பக்தர்களுக்கு ஆன்மிக ஊக்கம் அளிக்கப்பட்டது.





# ஈஸ்வரம்மா தின விழா - மாத்ரு பூஜை மற்றும் நூறு நிமிட பஜனை

தூத்துக்குடி | 11.5.25 | 80 பயனாளிகள் | 20 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி டவுன் சமிதியில் ஈஸ்வரம்மா தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் மற்றும் இந்நாள் மாணவர்கள் இணைந்து 100 நிமிட பஜனை செய்தனர். மேலும் தமது அன்னையரின் உயர்வை போற்றும் வகையில் மாத்ரு பூஜை செய்து பகவானின் அருளாசியை பெற்றனர்.

அதனை தொடர்ந்து பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் 30 - பெற்றோர், 25 - பாலவிகாஸ் மாணவர்கள், 12 - முன்னாள் பாலவிகாஸ் மாணவர்கள் மற்றும் பல சாயி அன்பர்கள் கலந்து கொண்டனர்.

பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள், தங்கள் வாழ்வில் பாலவிகாஸ் வகுப்பு ஏற்படுத்திய நல் மாற்றங்கள் பற்றியும் அதனால் தாங்கள் தங்கள் வாழ்வில் அடைந்த முன்னேற்றங்கள்

பற்றியும் இவ்வகுப்பின் முக்கியத்துவம் பற்றியும் சிறப்புரையாற்றினர்.

மேலும் விழாவின் ஒரு அம்சமாக ஹோமியோபதி மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. நிறைய பொதுமக்கள் இதன் மூலம் பயனடைந்தனர்.





# அமிர்தகலசம் வழங்குதல்

தூத்துக்குடி 4.5.25 **10** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு காந்திநகர் முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர்களுக்கு அமிர்த கலசம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அனைவருக்கும் தேவையான பொருட்கள் அடங்கி இருந்தன. பகவானின் அருளால் 5 சேவாதளத் தொண்டர்கள் பங்கேற்றனர். 10 பேர் இறைவனின் கருணையைப்பெற்று பயனடைந்தனர்.

# தேனி மாவட்ட மே மாத நிகழ்ச்சி நிரல்

தேனி மே மாதம் 124 பயனாளிகள்

21 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ சத்ய சாயி பாபா பெரியகுளம் சேவா சமிதியில் பிரதி மாதம் சனிக்கிழமையில் நாராயண சேவை நடைபெறுகிறது. இதில் ஒவ்வொரு வாரமும் எட்டு பேர் பயன் பெறுகின்றனர். இரண்டு ஆண் சேவாதள தொண்டர்கள் நாராயண சேவையை மேற்கொள்கின்றனர்.

மற்றும் மே 15ம் தேதி கம்மிங் கவுண்டன்பட்டி சமிதியில் ஆறு நபர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது. அங்கு பஜனையும் நடைபெற்றது.

மே 6ஆம் தேதி ஈஸ்வரம்பா தினத்தை முன்னிட்டு காமயன் கவுண்டன்பட்டி சமிதியில் பஜனைகள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஈஸ்வரமா தினத்தை முன்னிட்டு பெரியகுளம் சமிதியின் சார்பாக பெரியகுளம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் உள்ள மனநலம் குன்றிய நோயாளிகளுக்கு மாலை 4 மணி அளவில் பஜ்ஜி பிஸ்கட் காப்பி போன்ற சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. மொத்தம் 70 பேர் பயன் அடைந்தனர். இதில் ஏழு ஆண் சேவாதளத் தொண்டர்களும் நான்கு பெண் சேவாதளத் தொண்டர்களும்

பங்கேற்றனர்.

பெரியகுளம் சமிதியின் சார்பாக 11.5.2025 அன்று தேனி வேதபுரி ஸ்ரீ பிரஜா தட்சிணாமூர்த்தி திருக்கோயிலில் குரு பெயர்ச்சி நாளன்று மூன்று ஆண் சேவாதளத் தொண்டர்களும் ஐந்து பெண் சேவாதளத் தொண்டர்களும் பங்கேற்று குரு பெயர்ச்சி நாளில் வரும் பக்தர்களை ஒழுங்கு படுத்தியும் காலனி சேவைகளையும் மேற்கொண்டனர்.

# பாலவிகாஸ் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்

விருதுநகர் 1.5.25 **60** பயனாளிகள்

**90** சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு ராஜபாளையம் சமிதியில் பாலவிகாஸ் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.

பாலவிகாஸ் குழந்தைகள் ஸ்லோகம், பஜன், கதை சொல்லுதல் மற்றும் ஓவியம் வரைதல் போன்ற பல்வேறு போட்டிகளில்மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவ மாணவிகள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றனர்.

இதில் 60 பாலவிகாஸ் மாணவ மாணவிகள், 10 பாலவிகாஸ் குருமார்கள், மற்றும் 20 பெற்றோர்களும் கலந்து கொண்டனர். ஸ்வாமியின் அருளால் அனைத்து போட்டிகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மே 2025

Love All, Serve All
Help Ever, Hurt Never





# மாத்ரு பூஜா

விருதுநகர் 4.5.25 **100** பயனாளிகள்

**120** சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு ராஜபாளையம் சமிதியில் மாத்ரு பூஜா மே நான்காம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள், குருமார்கள் மற்றும் பெற்றோர்கள் என 120 பேர் கலந்து கொண்டனர். குழந்தைகளுக்கு பெற்றோரின் தியாகத்தையும் தாயின் மீது மரியாதையையும் வளர்க்கும் விதமாக குழந்தைகள் தம் அன்னையருக்கு பாத பூஜை செய்தனர். அன்னையர் அனைவரும் மனம் நெகிழ்ந்து குழந்தைகளை ஆசீர்வதித்தனர். நிறைவாக மங்கள ஆரத்தி மற்றும் நாராயண சேவையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.




## பாலவிகாஸ் கலை நிகழ்ச்சிகள்

விருதுநகர் 4.5.25 **60** பயனாளிகள்

**120** சேவாதளத்தொண்டர்கள்

ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு மே நான்காம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணி முதல் 8:00 மணி வரை ராஜபாளையம் சமிதியில் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் சுமார் 60 குழந்தைகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை பகவானுக்கு அர்ப்பணித்தனர்.

நடனம், பாடல் போன்ற கலை நிகழ்ச்சிகளின் மூலம் பாலவிகாஸ் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் கலந்துகொண்ட குழந்தைகள் அனைவருக்கும் சுவாமியின் அன்பு பரிசுகள் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டு மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.





# கோடை கால முகாம்

விருதுநகர் 10.5.25 60 பயனாளிகள்

60 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் திவ்ய கருணையால் சிவகாசி ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதியில் குழந்தைகளுக்கான கோடை கால முகாம் மே 10 முதல் 18 வரை 9 நாட்கள் நடைபெற்றது.

குழந்தைகளுக்கு ஆன்மீக விளையாட்டுகள், உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த கதைகள், பாடல்கள், நடனம், படம் வரைதல், வாழ்த்து அட்டைகள் செய்தல், குழு விளையாட்டுகள், யோகாசனங்கள், முத்திரைகள் போன்றவை கற்றுத் தரப்பட்டது. 50 குழந்தைகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஏழு குருமார்கள் இவர்களை வழிநடத்தி செல்லும் தன்னலமாற்ற சேவை செய்தார்கள். சமிதி கன்வீனர் அனைத்து குழந்தைகளையும் பெற்றோர்களையும் பாராட்டி ஊக்கப்படுத்தினார். சமிதி அன்பர்கள் அனைவரும் குழந்தைகளை ஊக்கப்படுத்தினார்கள்.

வியாழக்கிழமை அன்று குழந்தைகளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. குழந்தைகளும் பெற்றோர்களும் தங்களது உயர்ந்த கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.





# இல்லங்களில் சாயி பஜனை

விழுப்புரம் | மே மாதம் | 25 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் பகவானின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு உளுந்தூர்பேட்டையில் தினமும் 100 நாள் தொடர் வீட்டு பஜன், ஒவ்வொரு வீட்டிலும், முக்கியமாக புதியதாக பஜன் செய்யும் பக்தர்களின் வீட்டில் நடைபெறுகிறது.





## நாராயண சேவை

விழுப்புரம் | மே மாதம் | 35 பயனாளிகள் | 6 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் பகவானின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு உளுந்தூர்பேட்டை சமிதியில் தினமும் 100 நாள் தொடர் நாராயண சேவை, விழுப்புரம் சமிதியில் தினமும் ஒவ்வொரு குடும்பமும் நித்ய குடும்ப நாராயண சேவை, மற்ற சமிதிகளில் பொது நாராயண சேவை நடைபெறுகிறது.





## ஈஸ்வரம்மா தின சிறப்பு நிகழ்ச்சி

விழுப்புரம் 6.5.25

பகவானின் பரிபூரண ஆசியுடன் தெய்வத்தாய் ஈஸ்வரம்மா தினத்தை முன்னிட்டு மாவட்ட அளவில் பாலவிகாஸ் பிள்ளைகள் தங்களின் பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின் பாலவிகாஸ் பிள்ளைகளின் பரதநாட்டியம், வில்லுப்பாட்டு மற்றும் பாலவிகாஸ் குரு அவர்களின் சொற்பொழிவுடன் மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.






# மகிளா தின சேவை

விழுப்புரம் 19.5.25

பகவானின் ஆசியுடன் மகிளா தினத்தை முன்னிட்டு அரசு மருத்துவமனை உள்பயனாளிகளுக்கு பால், பிரட், விபூதி பிரசாதமாக வழங்கப்பட்டது. பின் பிறந்த குழந்தைகளுக்கு வஸ்திர தானம் செய்யப்பட்டது.



# தாகத்தை தணிக்கும் நீர் மோர்

கோயம்புத்தூர் | ஏப்ரல் 28 ஆம் தேதி முதல் மே 20 ஆம் தேதி வரை

3000 பயனாளிகள் | 328 சேவாதளத்தொண்டர்கள்

கோயம்புத்தூர் சாய்பாபா காலனி சமிதியின் சார்பாக பொது மக்களின் சிரமத்தை குறைக்கும் வண்ணம் வெய்யில் காலத்தின் வெப்பத்தில் மனிதர்களின் தாகத்தை குறைக்க உதவும் நீர்மோர் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் பங்குகொண்டு சேவை பணியில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபட்டனர். 84 பாலவிகாஸ் மாணவர்கள், 61 பாலவிகாஸ் மாணவிகள், 93 குருமார்கள், பெற்றோர் மற்றும் சாயி சகோதரிகள், 90 ஆண்கள் இச்சேவையில் பங்குகொண்டு பகவானின் அருள் பெற்றனர்.





# ஈஸ்வரம்மா தினக்கொண்டாட்டம்

கோயம்புத்தூர் | 1, 3, 4 & 6-05-2025 | **95** பயனாளிகள் | **95** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அன்னையான ஈஸ்வரம்மாவின் தினத்தினை முன்னிட்டு வடவள்ளி சமிதியின் சார்பாக ஆறு நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாலவிகாஸ் குழந்தைகள் தமது அன்னையருக்கு பாத பூஜை செய்யும் மாத்ரு பூஜை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிகழ்ச்சியில் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் 43 பேர் கலந்து கொண்டு ஸ்வாமியின் அருளுக்கு பாத்திரமானார்கள். மாநில அளவிலான ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகளிலும் நம் சமிதியை சேர்ந்த பாலவிகாஸ் மாணவர்கள் கலந்து கொண்டு ஸ்வாமியின் சாநித்தியத்தை உணரும் பாக்கியம் பெற்றனர்.

மேலும், பாலவிகாஸ் குழந்தைகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. குழந்தைகள் தமது திறமைகளை வெளிப்படுத்தி அனைவரின் பாராட்டினையும் பெற்றனர்.


ALL



# ஈஸ்வராம்மா தின சிறப்பு நிகழ்ச்சிகள் - கொடைக்கானல்

**கோயம்புத்தூர்** 3.5.25 **58** பயனாளிகள்

**58** சேவாதளத்தொண்டர்கள்

கடந்த மே 3 ம் தேதி கொடைக்கானலில் நடைபெற்ற ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகளில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் சார்பாக 58 பேர் பாலவிகாஸ் மாணவர்கள். பெற்றோர்கள் மற்றும் குருமார்கள் கலந்து கொண்டனர். பாலவிகாஸ் மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பாலவிகாஸ் மாணவர்கள் நம் ஸ்வாமியின் அருளால் அனைத்து நிகழ்ச்சிகளையும் நன்முறையில் அரங்கேற்றினார்கள். அனைவரும் ஸ்வாமியின் ஆசீர்வாதத்துடன் திரும்பினர்.





## ஈஸ்வரம்மா தினம் - கலை நிகழ்ச்சிகள்

கோயம்புத்தூர் | 6.5.25 | **42** பயனாளிகள் | **42** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பேரருளினால் கடந்த 06.05.2025 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தினத்தை சிறப்பிக்கும் வகையில் நமது பொள்ளாச்சி ஸ்ரீ சத்ய சாய் சமிதியில் பாலவிகாஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மாலை 5.00 முதல் 6.00 மணிவரை நடைபெற்றது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் மாலை 5.00 மணிக்கே வருகை தந்து ஆர்வமுடன் கலந்துகொண்டார்கள். சமிதியின் பொறுப்பாளர்களும், சாய் அன்பர்களும் இதில் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்தி பகவானின் ஆசி பெற்றார்கள். அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.

# மந்திர் பிரவேச தினம்

கோயம்புத்தூர் 8.5.25 **35** பயனாளிகள்

**35** சேவாதளத்தொண்டர்கள்

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் கோ- ஆப்பரேட்டிவ் காலனி மற்றும் அன்னபூரணி பேட்டை சமிதிகளின் சார்பாக 08.05.2025 வியாழக்கிழமை பகவானின் "மந்திர் பிரவேச" தினத்தை முன்னிட்டு அன்னபூரணி பேட்டை சமிதியில் நடைபெற்ற ஹோமியோபதி மருத்துவ முகாமில் நோயாளிகளுக்கு பிஸ்கட் மற்றும் ரொட்டிகள் வழங்கப்பட்டன.

மதியம் 12.00 மணி அளவில் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் பாலவிகாஸ் குழந்தைகளால் நாராயண சேவை மற்றும் வஸ்திர தானம் நடத்தப்பட்டன. மாலை 6.15 மணி முதல் 7.30 மணி வரை சிறப்பு சாயி பஜன் மற்றும் மகா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இதில் ஒன்பது பாலவிகாஸ் குழந்தைகள், பதினான்கு மகிளாக்கள், மற்றும் பதினான்கு ஆண்கள் கலந்து கொண்டனர்.

# ஈஸ்வரம்மா தினம்

கோயம்புத்தூர் 6.5.25 32 பயனாளிகள்

32 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நூறாவது பிறந்த வருட வைபவத்தை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தின் இரு சமிதிகளின் சார்பாக 06.05.2025 செவ்வாய் கிழமை "ஈஸ்வரம்மா தின" நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

காலை 5.00மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதம் மற்றும் நகர சங்கீர்த்தனம் கோ- ஆப்பரேட்டிவ் காலனி சமிதியில் நடைபெற்றது. மதியம் காரமடையில் அமைந்துள்ள அன்புமலர் உடல் ஊனமுற்றோர் சமூக நலவாழ்வு சங்கத்தில் நாராயண சேவையானது நடைபெற்றது.

மாலை அன்னபூரணி பேட்டை சமிதியில் சிறப்பு பஜனைக்கு பிறகு பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்து அவர்களிடம் இருந்து அன்பு ஆசிகளைப் பெற்றனர். அதன் பிறகு மகா மங்கள ஆரத்தியுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

இதில் பத்து பாலவிகாஸ் குழந்தைகள், பத்து மகிளாக்கள் மற்றும் பதினொரு ஆண்கள் கலந்து கொண்டனர்.





# உலக நலன் மற்றும் ஆரோக்கியத்திற்காக சிறப்பு ஹோமம்

கோயம்புத்தூர் 31.5.25 **30** பயனாளிகள்

**30** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் நூறாவது பிறந்த வருட வைபவத்தை முன்னிட்டு கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அன்னபூரணி பேட்டை மற்றும் கோ- ஆப்பரேட்டிவ் காலனி சமிதிகளின் சார்பாக அனைத்து மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனை கருதி 31.5.2025 சனிக்கிழமை அன்று காலை 9.00மணி முதல் அன்னபூரணி பேட்டை சமிதியில் ஸ்ரீ சத்ய சாயி அஷ்டோத்திரம், பஜனுடன் தொடங்கி கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் மற்றும் தன்வந்திரி ஹோமம் முதலிய ஹோமங்களுடன் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

இந்நிகழ்வு சுவாமியின் மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவடைந்தது. இதில் மூன்று பாலவிகாஸ் குழந்தைகள், பதின்மூன்று மகிளாக்கள் மற்றும் பதின்மூன்று ஆண்கள் கலந்து கொண்டனர்.





# ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம்

கோயம்புத்தூர் 25.4.25

பகவானின் பெருங் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பாக "ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம்" மற்றும் அதனைத் தொடர்ந்து நாம சங்கீர்த்தனமும் சென்ற 25.4.2025 அன்று ராம் நகர் அருள்மிகு ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி திருக்கோவிலில் அமைந்துள்ள ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த ப்ரவசன மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஸ்ரீ அபிராமி இசைக் குழுவினர், (பரிபாலன பேஸ்-2,கோயம்புத்தூர்.) வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சி இத்தொடரின் பன்னிரண்டாவது நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியில் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டு சுவாமியின் அருளுக்கு பாத்திரம் ஆனார்கள்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சத்ய சாயி பஜனையும் கடந்த 27.05.2025 அன்று ராம் நகர் அருள்மிகு ஸ்ரீ கோதண்டராம சுவாமி திருக்கோவிலில் அமைந்துள்ள ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த ப்ரவசன மண்டபத்தில் "ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம்", பொது இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை கோயம்புத்தூர் மாவட்டத்தின் குனியமுத்தூர் சமிதி சாயி அன்பர்கள் வழங்கினார்கள்.

இது இத்தொடரின் 13- வது நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியில்

பக்தர்கள் பலரும் கலந்து கொண்டு சுவாமியின் அருளுக்கு பாத்திரம் ஆனார்கள்.

## 100 பஜனை பாடல்கள் சமர்ப்பண நிகழ்ச்சி

கோயம்புத்தூர் 27.4.25

பகவானின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுவாமியின் நூறாவது பிறந்த ஆண்டு வைபவங்களின் ஒரு பகுதியாக சுவாமி அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு நேரில் வந்து அருள் புரிந்த ஆலயங்கள் மற்றும் சமிதிகளில் 100 பஜனை பாடல்கள் பாடுவதாக பிரார்த்தனை செய்து கொண்டதற்கு இணங்க சென்ற 27.4.2025 அன்று இதன் இரண்டாவது நிகழ்ச்சியாக ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி, குனியமுத்தூரில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சாயி அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு சுவாமியின் அருளுக்கு பாத்திரம் ஆனார்கள்.

25.05.2025 அன்று இதன் மூன்றாவது நிகழ்ச்சி, ஸ்ரீ நாகசாயி மந்திரில் (மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்) சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலயத்தில் 26.02.1961 அன்று நம் சுவாமி அவர்கள் தம் திருகரங்களினால் சீரடி சாயி பாபாவின் பளிங்குச் சிலையை பிரதிஷ்டை செய்து வைத்தார் என்பது இத்தலத்தின் சிறப்பு ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் சாயி அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு சுவாமியின் அருளுக்கு பாத்திரம் ஆனார்கள்.


Sri Sai Tech Systems


Sri Sai Tech Systems

# சிறப்பு கண் மருத்துவ முகாம்

கோயம்புத்தூர் 1.5.2025.

பகவானின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் குப்பநாயக்கன்பாளையம் சமிதியின் சார்பாக அக்கிராமத்தில் 1.5.2025 அன்று கோவை, ராம் நகர் "பொன்னம்மாள் துரைசாமி" கண் மருத்துவமனையின் உதவியுடன் இலவச கண் பரிசோதனை முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் நம் பகவான் நமக்களித்த "ஸ்ரீ சத்ய சாயி நடமாடும் மருத்துவ பேருந்து" தன்னுடைய ஐம்பதாவது சேவையை சிறப்பாக வழங்கியது.

இதில், ஒரு மருத்துவர், நான்கு டெக்னீசியன்கள் பங்குகொண்டனர். இதில் பயனடைந்த நாற்பத்தெட்டு பயனாளிகளில், பத்தொன்பது பேர் ஆண்கள், இருபத்தொன்பது பேர் பெண்கள் ஆவர். இருபது சேவாதளர்கள் இங்கு சேவை புரிந்தனர். இம்முகாமில் பதினாறு நபர்கள் இரத்தப் பரிசோதனை செய்து கொண்டனர்.

# கோ பூஜை

கோயம்புத்தூர் 4.5.25

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் சாயி பாபா காலனி சமிதியில் "அன்னை ஈஸ்வரம்மா"தின நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 4.5.2025 அன்று பால விகாஸ் மாணவர்கள், குருமார்கள், பெற்றோர்கள் மற்றும் பக்தர்கள் அனைவரும் சேர்ந்து "கோ பூஜை" வழிபாடு செய்தனர்.

அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வந்த பழங்கள் மற்றும் கீரைக் கட்டுகளை "கோ மாதா" விற்கு வழங்கி மகிழ்ந்தார்கள். பின்னர் பஜனைப் பாடல்கள் பாடப் பட்டன.



## பாத பூஜை

கோயம்புத்தூர் 4.5.25

ஸ்வாமியின் பெரும் கருணையினால் 04.05.2005 ஞாயிறு காலை 10.00 மணியளவில் கோட்டூர் மலையாண்டிப் பட்டணம் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் பாலவிகாஸ் குழந்தைகள் தத்தம் பெற்றோர்களுக்கு பாத பூஜை செய்து பெற்றோர்களின் ஆசிகளைப் பெற்றனர்.

பெற்றோர்களும் மற்றும் சாயி சகோதர, சகோதிரிகளும் பாலவிகாஸ் குழந்தைகளை ஆசிர்வதித்து மகிழ்ந்தனர்.

சாயி சகோதரர் டாக்டர் திரு. வாசுதேவன் மற்றும் சமிதி கன்வீனர் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு அனைவருக்கும் நல் ஆசியும் அருளும் வழங்க பகவானிடம் பிரார்த்தனை செய்தனர். மாலையில்" சிறப்பு பஜனையும்" நடைபெற்றது இறுதியில் மகா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதாக நிறைவுற்றது.

## சிறப்பு ஆன்மீக நிகழ்ச்சிகள்

**கோயம்புத்தூர்** 8.5.25

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு நம் ஸ்வாமி அவர்கள் 8.5.1989 அன்று கீழ் கண்ட மூன்று இடங்களுக்குச் சென்று அருளாசி வழங்கினார். போத்தனூர் சமிதி, குப்பநயக்கன்பாளையம் சமிதி மற்றும் மேட்டுப்பாளையம் அன்னபூரணி பேட்டை சமிதி. அப்போது குப்பநாயக்கன்பாளையத்தில் ஸ்வாமி அவர்களின் அருட் கரங்களினால் அருள்மிகு ஸ்ரீ சத்திய காளியம்மன் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து வைத்தார்.

இந்த நாளை நினைவு கூறும் வகையில் மேற்கூறிய மூன்று இடங்களிலும் 8.5.2025 அன்று ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஸ்ரீ சத்ய சாயிபஜனைப் பாடல்கள் பாடப் பட்டன. குப்பநாயக்கன்பாளையம் அருள்மிகு ஸ்ரீ சத்ய காளியம்மனுக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்களும் செய்யப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சுவாமியின் அருளும் ஆசிகளும் கிடைக்க பிரார்த்தனை செய்யப் பட்டது.

# ஏகாதச ஸ்ரீ ருத்ர பாராயணம்

**கோயம்புத்தூர்** 18.5.25

பகவானின் பரிபூரண ஆசியுடன் பகவானின் நூற்றாண்டு அவதாரத் திரு நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக உலக நன்மை வேண்டி 100 சிவாலயங்களில் ருத்ர பாராயணம் செய்வது என்று ஸ்வாமியிடம் பிராத்தனை செய்யப் பட்டது அதன் தொடர்ச்சியாக 18.05.25 அன்று 42 வதாக (42/100) போத்தனுர் செட்டிபாளையம் அருள்மிகு ஸ்ரீ ஆதி பரமேஸ்வரர் உடனுறை ஸ்ரீ ஆதி சக்தி ஆலயத்தில் காலை 09.00 மணி முதல் பகல் 12.15 மணி வரை ஏகாதச ருத்ர பாராயணம் ஓதப் பட்டது.

கலந்து கொண்டவர்கள்: மகிளாஸ். : 43 பேர், ஆண்கள் :31 பேர், பொது மக்கள் : 30 பேர், மொத்தம். : 104 பேர்

பகவானின் ஆன்மீக மாத இதழான ஸனாதன ஸாரதி பற்றி புதிதாக வந்த பக்தர்களிடம் விளக்கிக் கூறி இதழ்களும் மற்றும் பாலவிகாஸ் வகுப்புகள் பற்றிய குறிப்புகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

# மகளிர் இலவச பொதுநல மருத்துவ ஆலோசனை

கோயம்புத்தூர் 19.5.25 99 பயனாளிகள்

20 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெருங்கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் குனியமுத்தூர் சமிதியில் 19-05-2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பாக மாதாந்திர மகளிர் இலவச பொதுநல மருத்துவ ஆலோசனை முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் பங்கேற்றவர்கள். மருத்துவர்கள் 3 பேர் மருத்துவ உதவியாளர்கள் 6 பேர் மற்றும் சேவாதள் 5 பேர். இதில் பயனடைந்தவர்கள்: 99 பேர். கண் பரிசோதனை செய்து கொண்டவர்கள்: 28 பேர்.

மதுரை கண் மருத்துவமனையிலிருந்து, தொழில்நுட்ப கலைஞர்கள் 7 பேர் இந்த முகாமில் கலந்து கொண்டு தன்னல மற்ற சேவை செய்தனர்.

# சேவா வாணி




எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக ssssotnreporting@gmail.com முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

ஸ்ரீ சத்ய சாய் தமிழ்

Sri Sathya Sai Media Centre

Prasanthi Connect

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு